பக்கங்கள்:19 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 19 ஞாயிற்றுக்கிழமை 03.07.2022 கதிர் 240

### இனி இது ரகசியம் அல்ல!

இப்பத்தியில் ஒவ்வொரு நாளும் என்னுடைய எழுத்தை வாசித்துச்சலித்தவாசகர்களுக்கு இன்று ஒரு மாற்றம். இன்றைய சர்ச்சையை வரைந்தவர் ஓர் அன்பர். வாட்ஸ் அப் மூலம் அவர் அனுப்பிய விடயத்தை அப்படியே தருகிறேன். ☞2

# கோட்டாபய உறுதிப்படுத்திய தேசியப் பாதுகாப்பு எங்கே?



## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கேள்வி

கொழும்பு, ஜூலை 03

தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகக் கூறியே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் இன்று தேசிய பாதுகாப்பு பூச்சியமாக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்று கையிட்டுள்ளனர். இதனால் அப்பகுதிகளுக்கு வழமையைப் போன்று செல்ல முடியாத நிலைமை காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ☞4



## பஸ் நடத்துனரைத் தள்ளி விழுத்தி 59 ஆயிரம் ரூபா பணம் கொள்ளை

### உமையாள்புரத்தில் நேற்றிரவு அடாவடி

யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாறை நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸில் பயணித்த மூவர், பஸ்ஸிலிருந்து இறங்கு மோது பஸ் நடத்துனரைத் தள்ளி விழுத்தி அவரிடமிருந்த பணத் தைக்கொள்ளையிட்டுக்கொண்டு ஓடித் தப்பிய சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாறை நோக்கிப் பயணித்த அரச பஸ்ஸில் பயணித்த மூவரே இவ்வாறு பஸ் நடத்துன ரைத் தள்ளிவிழுத்தி அவரிடமி ருந்து 59 ஆயிரத்து 177 ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் னிரவு கிளிநொச்சி உமையாள் புரம் பகுதியில் இடம்பெற்றுள் ளது.

மூவரும் யாழ்ப்பாணத்திலி ருந்து பயணித்து உமையாள் புரம் பகுதியில் பஸ்ஸில் இருந்து இறங்கியுள்ளனர்.

அவர்கள் இறங்குவதற்காக நடத்துனர் இடம்விட முற்பட்ட போது அவரைத் தள்ளிவிழுத்தி அவரிடமிருந்த பணத்தினைப் பறித்துக் ☞2

## கப் – காட்டு யானை மோதி விபத்து சிங்கள நடிகர் அன்ரனி படுகாயம்!





பிரபல சிங்கள நடிகர் ஜக் ஸன் அன்ரனி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் பயணித்த கப் வாக னம் தலாவ பிரதேசத்தில் ☞2

## இரண்டாவது மக்கள் அலை சுனாமியாக எழுந்து வருமாம்

### அரசை விரட்டத் தயார் என்கிறார் அனுரகுமார



இந்த அரசாங்கத்தை அடித் துத்துரத்திவெளியேற்றும் இரண் டாவது மக்கள் அலை சுனாமி போன்று முன்னோக்கித் திரண்டு வரும் எனத் தேசிய மக்கள் சக்தி யின் தலைவர் அனுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

அம்பலன்தொட்டவில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ☞19

## விடைத்தாள் திருத்தும் பணி இடைநிறுத்தம்

கல்விப் பொதுத் தராதர சாதா ரண தர பரீட்சையின் இரண்டாம் கட்ட விடைத்தாள் திருத்தும் பணியை நிறுத்துவதற்கு பரீட்சை திணைக்களம் தீர்மானித்துள் ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரி பொருள் நெருக்கடி காரணமா கவே இந்த தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

## யாழ்.- கிளி. ரயில் சேவை அடுத்த வாரம் தொடங்கும்?

### அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்குப் பலன்



யாழ்ப்பாணத்துக்கும், கிளி நொச்சிக்கும் இடையிலான விசேட ரயில் சேவையொன்று அமைச்சர் டக்ளஸ் ☞4

## காலி வீதிக்கு ஏறிய அலைகள்



தென்னிலங்கையின் சில பகுதிகளில் கடல் அலைகள் திடீ ரென நிலப் பகுதிக்குள் புகுந் துள்ள நிலையில் பொதுமக்க ளுக்கு அவசர அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தெஹிவளை, அம்பலாங் கொடை, ☞2

## திருக்கேதீஸ்வரத்தில் 16 அடி சிவன் சிலை பாலாவி தீர்த்தக்கரையில் நாவலரின் சிலை

### சிவபூமி அறக்கட்டளையால் ஆறு. திருமுருகன் ஏற்பாட்டில் இன்று திறப்பு



இலங்கை சிவபூமி அறக்கட்டளை அமைப்பினால் திருக்கேதீஸ்வரத்தில் அமைக்கப்பட்டுள்ள 16 அடி உய ரமான சிவன் உருவச் சிலையைத் திறந்த வைக்கும் வைபவம், திருக்கேதீஸ்வரம் ‘சிவபூமி பாலாவி மடம்’ அங்குரார்ப்பண வைபவம், பாலாவியின் தீர்த்தக் கரை சந்தியில் அமைக்கப்பட்ட நல்லைநகர் நாவலர் பெருமானின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக் கும் வைபவம் ஆகிய மூன்று நிகழ்ச்சிகள் இன்று காலை 9 மணி முதல் இடம் பெற உள்ளன. ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'வடக்கு சுகாதாரத் துறையில் நிர்வாக திறன் உடையவர்கள் எவருமே இல்லையா?' – என்ற தலைப்பில் அந்தப் பதிவு சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டிருக்கின்றது. அது வருமாறு:–

யாழ்ப்பாணம் வலிகாமத்தில் உள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கு இன்று முதலாம் திகதி வெள்ளிக்கிழமை கொக்குவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

தற்போதைய நேரம், இரவு 8 மணியை தாண்டியும் வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட ஆயிரக் கணக்கான சுகாதாரத் துறை பணியாளர்கள் நீண்ட வரிசையில் எரிபொருளுக்காக காத்திருக்கின்றார்கள். இவர்களில் அதிகமானோர் பெண்கள்.

பல்லாயிரக்கணக்கான சுகாதாரப் பணியாளர்களை ஒரே இடத்தில் குவித்து வைத்து எரிபொருள் விநியோகிப்பதால் அவர்கள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகி இருக்கின்றார்கள்.

இன்று அதிகாலை தொடக்கம் இரவு வரை இவர்கள் கடும் வெயிலுக்கு மத்தியில் காத்திருந்ததால் உடல், உள உபாதைகளுக்கு ஆளாகி இருக்கின்றார்கள்

எரிபொருளுக்காக காத்திருந்தவர்கள் மற்றும் காத்திருப்பவர்களில் நூற்றுக்கணக்கானோர் இன்று வைத்தியசாலைகளில் இரவு நேர பணிகளுக்காகச் செல்ல இருந்தவர்கள்.

இவர்களில் பலர் காலை 6 மணியிலிருந்து எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக வரிசைகள் காத்திருந்துவிட்டு பிற்பகல் 5 மணிக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ளாமலே தமது கடமைகளுக்காகச் சென்றிருக்கின்றார்கள்.

வலிகாமத்தில் உள்ள ஏறக்குறைய பத்தாயிரத்துக்கு அதிகமான சுகாதாரப் பணியாளர்களை, அதாவது வைத்தியர்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய சுகாதார பணியாளர்களை ஒரே இடத்தில் வரவழைத்து எரிபொருள் விநியோகிக்க முடியும் என்ற முடிவை யார் எடுத்தது?

ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் உள்ளிட்ட தீவுப் பகுதிகளில் உள்ள சுகாதாரப் பணியாளர்கள் கூட கொக்குவில் பிரதேசத்துக்கே வருகை தந்து எரிபொருளை பெற்று திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கின்றது.

அவர்கள் இங்கு வந்து எரிபொருளை பெற்று திரும்புவதற்கு அதிகளவான எரிபொருள் வீணாகிவிடும்.

தற்போதைய நெருக்கடி நிலையில் இது அவர்களை எந்த அளவு பாதிக்கும் என்பதை சுகாதாரத் துறை அதிகாரிகள் சிந்திக்க முடியாமல் போனது ஏன்?

வலிகாமம் மற்றும் தீவகத்தை உள்ளடக்கி, ஒரு போதனா வைத்தியசாலை, இரண்டு ஆதார வைத்தியசாலைகள், 10 வரையான பிரதேச வைத்தியசாலைகள், இருபதுக்கும் அதிகமான ஆரம்ப சுகாதார நிலையங்கள், 9 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள், இவற்றைவிட வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், பண்ணை மார்புநோய் சிகிச்சை நிலையம் போன்றவற்றை உள்ளடக்கினால் 10 ஆயிரத்துக்கு அதிகமான சுகாதார துறை பணியாளர்கள் உள்ளனர்.

சித்த மருத்துவத் துறையில் மருத்துவர்கள், பணியாளர்கள் என நூற்றுக்கணக்கானோர் உள்ளனர்.

யாழ் போதனா வைத்திய சாலையில் மாத்திரம் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர்களை உள்ளடக்கி அண்ணளவாக 3 ஆயிரத்துக்கு அதிகமான பணியாளர்கள் உள்ளனர்.

இத்தகைய பெருமளவான பணியாளர்களுக்கு ஒரே இடத்தில் – அதுவும் ஒரே நாளில் எரிபொருளை வழங்கி முடிக்க முடியும் என்ற முடிவை எடுத்தவர் யார்? வடக்கு மாகாண சுகாதாரத்துறை இந்த அளவுக்கு பலவீனமான நிர்வாக திறமையுடன்தான் இயங்குகின்றதா?

ஊர்காவற்றுறை உள்ளிட்ட தீவுகள் மற்றும் நீண்ட இடங்களில் இருந்து கொக்குவில் எரிபொருள் நிரப்புநிலையத்திற்குளிபொருளைபெற்றுக்கொள்ள வந்தவர்களுக்கு இன்று 2000 ரூபாய்க்கு எரிபொருள் வழங்கப்பட்டிருக்கின்றது.

எவ்வாறெனினும் அவர்களுக்கு ஒரு லீட்டருக்கும் அதிகமான எரிபொருள் போக்குவரத்திற்காக செலவாகி இருக்கும்.

மேலும் காலை ஏழு மணியிலிருந்து பிற்பகல் வரை வரிசையில் அவர்கள் காத்திருந்த வேளை மதிய உணவு மற்றும் குடிபானங்களுக்காக ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவாகி இருக்கும்.

ஆக அவர்களுக்கான எரிபொருள் மீதி என்பது எவ்வளவு என்பதை இந்த முடிவை எடுத்த சுகாதாரத்துறை அதிகாரிகள் சிந்திக்காமல் போனமை ஏன்?

வலிகாமத்தை பொறுத்தவரை யாழ். போதனா வைத்தியசாலை, யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை, வேலணை பிரதேச வைத்திய சாலை மற்றும் யாழ். நகரில் உள்ள சுகாதாரத்துறை பணியாளர்களை உள்ளடக்கி யாழ் நகரில் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை தேர்வு செய்திருக்க முடியும்.

அதேபோன்று ஏனையவர்களுக்கு கொக்குவில் மற்றும் சங்கானை எரிபொருள் நிரப்பு நிலையங்களை தேர்வு செய்திருக்க முடியும்.

அவ்வாறு ஏற்பாடுகளை மேற்கொண்டு இருந்தால் இன்று ஒரே நாளில் ஏராளமான சுகாதார பணியாளர்களுக்கு எரிபொருளை விநியோகித்திருக்கலாம்.

இதை விடுத்து வலிகாமத்தில் உள்ள அனைத்து சுகாதார பணியாளர்களையும் ஒரே இடத்தில் எரிபொருளுக்காக அழைத்து அவர்களை அவலங்களுக்குள் தள்ளியிருக்கின்றமை வடக்கு மாகாண சுகாதார துறையின் பலவீனமான நிர்வாக திறமையை வெளிப்படுத்தி இருக்கிறது.

– இது என்.பிருந்தாபன் என்ற பெயரில் அந்த அன்பர் வரைந்த விடயங்கள்.

சுகாதார அதிகாரிகள் மற்றும் இந்தப் பெற்றோல் விநியோகத்தை வழிப்படுத்திய செயலக அதிகாரிகள் பக்கத்திலும் ஏதேனும் விளக்கங்கள் இருக்க கூடும். ஒரு பவுசரில் வருகின்ற எரிபொருளை, பல எரிபொருள் நிலையங்களுக்கு திருப்பி விட முடியாது என்ற பிரச்சினை இருந்திருக்க கூடும். ஆனாலும் இந்த அன்பர் தெரிவித்த விடயங்களில் உற்றுக் கவனிக்கப்பட வேண்டிய ஆழமான பல அம்சங்கள் உள்ளன. அதிகாரிகள் இவற்றை கவனிக்க வேண்டும்.

– மின்னல் –

---

## பஸ் நடத்துனரைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டு ஓடியுள்ளனர்.

அவர்கள் இறங்கிய இடத்தில் வேறு சிலரும் அவர்களுக்காகக் காத்திருந்தனர் என பஸ்ஸில் பயணித்தவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

---

## திருக்கேதீஸ்வரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிவபூமி அறக்கட்டளை அமைப்பின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனின் ஏற்பாட்டில் அவரது தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

---

## கப் - காட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காட்டு யானை உடன் மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் கெப் வாகனத்தில் பயணித்த அன்ரனியும் மற்றிருவரும் படுகாயம் அடைந்த நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

---

## தென்னிலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாத்தறை மற்றும் காலி ஆகிய பகுதிகளில் கடல் அலைகள் இவ்வாறு கரையை தாண்டி நிலத்திற்குள் வந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன்படி அக்குரல, கஹவ, தெல்வத்த பகுதியிலிருந்து கடல் அலைகள் காலி – கொழும்பு பிரதான வீதியை வந்தடைந்துள்ளன. இதன் காரணமாக அந்த வீதியின் அப்பகுதிகள் போக்குவரத்துக் குத் தடைப்பட்டுள்ளன.


பொதுமக்கள் இந்த வீதிகளூடாக அவதானமாகப் பயணிக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, புத்தளத்தில் இருந்து கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், குறித்த கடல் பகுதிகளில் காற்றின் வேகம் அவ்வப்போது மணிக்கு 60 முதல் 70 கிலோமீட்டர் வரை அதிகரித்து வீசக்கூடும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 ஆண்டுகள் பாவனையிலிருந்த செய்தி நிறுவன Premium Domain Name (todaytamilnews.com) விற்பனைக்குண்டு.

தொடர்பு 0771297907




காலம்:
03.07.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.05 மணி
இடம்:
திருக்கேதீஸ்வரம் பிரதான வீதி, மன்னார்.

தலைவர்
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள்
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

சிவனடியார்கள் அனைவருக்கும்
வணக்கம்
இலங்கை சிவபூமி அறக்கட்டளை நிர்வாகத்தால்
உருவாக்கப்பட்ட சுமார் 16 அடி உயரமான
சிவன் உருவச்சிலையை திறந்து வைக்கும் வைபவத்திலும்,
எமது அறக்கட்டளையினரால் பாலாவி தீர்த்தக்கரைச்
சந்தியில் அமைக்கப்பட்ட நல்லைநகர் நாவலர் பெருமானின்
திருவுருவச் சிலையை திறந்து வைக்கும்
புனித வைபவத்திலும் அனைவரும் கலந்து கொண்டு
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவபூமி தலைமை அலுவலகம்,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 7938

சிவபூமி அறக்கட்டளை,
இலங்கை.

காலைக்கதிர் Kalaikkathir

# 4 கோடி ரூபா தங்கக் கட்டிகளுடன் விமான நிலையத்தில் ஒருவர் கைது!

4 கோடி ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளுடன் இலங்கையர் ஒருவரை கைதுசெய்துள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று (சனிக்கிழமை) காலை டுபாயிலிருந்து வந்த விமானம் மூலமே மேற்படி நபர் இலங்கை வந்துள்ளார்.

இவரிடம் சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் 16 தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தங்கக்கட்டிகளின் பெறுமதி 4 கோடியே 72 லட்சத்து 11 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.



கைதுசெய்யப்பட்ட நபரிடம் சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







## மணமகன் விபரம்

பிறந்த திகதி-21.06.1986
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-கேட்டை
கி.பா-36
செவ்-11ல்
தகைமை-TEX DRASS MEM
தொழில்-அரசசேவை
எதிர்பார்ப்பு- அரசசேவை தனியார் மணமகள்

பிறந்த திகதி-19.12.1980
மதம்-இந்து
ஜாதி-V சைவம் ஆண்
நட்சத்திரம்-பரணி5
கி.பா-6
செவ்-சூரி 3ல்
தகைமை-B.SC COMPUTER
தொழில்-COMPANY COLOMBO
எதிர்பார்ப்பு- -பட்டதாரி அரசசேவை தனியார் மணமகள்

பிறந்த திகதி-13.11.1991
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-உத்தராடம் 4
கி.பா-14
செவ்-சூரி2
தகைமை-I.T SOFTWARE ENG
தொழில்-U,S,A COMPANY
எதிர்பார்ப்பு- ENG DOCTOR மணமகள்தேவை

பிறந்த திகதி-28.01.1991
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-திருவாதிரை
கி.பா-31
செவ்-1ல்
தகைமை- M.B.B.S
தொழில்-DOCTOR
எதிர்பார்ப்பு- ENG DOCTOR மணமகள்

பிறந்த திகதி-18.03.1991
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-ரேவதி
கி.பா-10
செவ்-4ல்
தகைமை-M.B.B.S
தொழில்-DOCTOR
எதிர்பார்ப்பு - DOCTOR மணமகள்

பிறந்த திகதி-20.07.1985
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-ஆயிலியம்
கி.பா-4
செவ்-சூரி 12
தகைமை-B.A
தொழில்-அரசசேவை
எதிர்பார்ப்பு- அரசசேவை மணமகள்

பிறந்த திகதி-16.04.1985
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-சதயம் 4
கி.பா-9
செவ்-12ல்
தகைமை-B.S.C M.SC
தொழில்- U.S.A. PR
எதிர்பார்ப்பு- பட்டதாரி U.S.A மணமகள் இலங்கை

பிறந்த திகதி-20.08.1990
மதம்-இந்து
ஜாதி-V ஆண்
நட்சத்திரம்-ஆயிலியம் 4
கி.பா-25
செவ்-8ல்
தகைமை-ACCOUNTANT
தொழில்-UK ACCOUNTANT
எதிர்பார்ப்பு- UK-CEYLON மணமகள்

## மணமகள் விபரம்

பிறந்த திகதி-21.01.1983
மதம்-இந்து
ஜாதி-சைவம் V பெண்
நட்சத்திரம்-ரேவதி 4
கி.பா-28
செவ்-11ல்
தகைமை-B.A
தொழில்-COMPANY
எதிர்பார்ப்பு- தனியார் அரசசேவை மணமகன் (உத்தரம், அத்தம், சித்திரை(1,2) சுவாதி)

பிறந்த திகதி-25.05.1992
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-அனுசம் 1
கி.பா-25
செவ்-2ல்
தகைமை-B.S.C
தொழில்-பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு- ENG-DOCTOR அரச உயர் பதவி மணமகன்

பிறந்த திகதி-05.02.1995
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-ரேவதி
கி.பா-68
செவ்-7ல்
தகைமை-FINANCIAL ENG
தொழில்-ACCOUNTANT
எதிர்பார்ப்பு- வெளிநாடு PR மணமகன்

பிறந்த திகதி-24.08.2022
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-பரணி
கி.பா-55
செவ்-சூரி 1ல்
தகைமை-G.C.G A/L
தொழில்- .-
எதிர்பார்ப்பு-வெளிநாடு PR மணமகன்

பிறந்த திகதி-30.10.1997
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-சித்திரை 1
கி.பா-34
செவ்-4ல்
தகைமை-G.C.E A/L
தொழில்- -
எதிர்பார்ப்பு- UK. GERMANY, CANADA வெளிநாடு PR மணமகன்

பிறந்த திகதி-05.09.1997
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-அத்தம்
கி.பா-33
செவ்-4ல்
தகைமை-HND QS
தொழில்- QUANTRY SARVEYOR
எதிர்பார்ப்பு- உள்நாடு-வெளிநாடு பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி-08.12.1990
மதம்-இந்து
ஜாதி-V பெண்
நட்சத்திரம்-மகம்
கி.பா-24
செவ்-8ல்
தகைமை-M.B.B.S
தொழில்- DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR ENG மணமகன்

பிறந்த திகதி-02.10.1994
மதம்-இந்து
ஜாதி-விஸ்வகுலம்
நட்சத்திரம்-மகம்
கி.பா-40
செவ்-10ல்
தகைமை-M.B.B.S
தொழில்- DOCTOR
எதிர்பார்ப்பு- DOCTOR மணமகன் மட்டும்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விபரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.












காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# விவகாரம் உயர்நீதிமன்றிடம்

**உயர்நீதிமன்றம் போன்ற நாட்டின் மீயுயர் நீதிமன்றங்கள் வழமைக்கு மாறான சில சமயங்களின் – நெருக்கடி வேளைகளில் – தங்களுடைய நியாயாதிக்க விடயங்களின் எல்லைப் பரப்பை தேவைக்கேற்ப விசாலப்படுத்தி, தனித்துவத்துடன் நீதி விடயங்களைக் கையாள்வது உண்டு.**

**வழமையான சட்ட ஏற்பாடுகளுக்கு அப்பால் இயற்கை நீதியைப் பிரயோகிக்கும் தங்கள் அதிகாரத்தைத் தற்துணிவோடு விசாலப்படுத்தி விடயங்களை அவை கையாள்வது நடைபெறுவதுதான்.**

**இந்திய உச்ச நீதிமன்றங்கள் அப்படி விசேட– சிறப்பு – முறையில் செயற்பட்ட பல முன்னுதாரணங்கள் சரித்திரத்தில் உண்டு.**

**அப்படி எழுதப்பட்ட சட்டங்களுக்கு அப்பாலும் சென்று, எழுதப்படாத இயற்கை நீதியின் அடிப்படையிலும் விவகாரங்களைக் கையாள வேண்டிய ஒரு தேவையை ஏற்படுத்தியுள்ள சில அவசர – அத்தியாவசிய – மனுக்கள் அல்லது விண்ணப்பங்கள் உயர் நீதிமன்றத்தின் முன்னால் வந்துள்ளன.**

**அவற்றில் ஒன்று இலங்கை மக்களை மிக மோசமான நெருக்கடியில் ஆழ்த்தியிருக்கும் தற்போதைய அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு தொடர்பானதாகும்.**

**மக்களின் வாழ்வியலுக்கு அத்தியாவசியமான எரிபொருள், எரிவாயு, மின்சாரம், மருந்துகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை சந்தைக்கு வழங்க முடியாத இயலாத்தன்மையில் இருக்கும் அரசுக்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் சாலிய பீரிஸும் மற்றும் மூவரும் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.**

**பிரதமர், அமைச்சர்கள் மற்றும் அமைச்சுகளின் செயலாளர்கள் என 43 பேர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.**

**மக்களின் அன்றாட வாழ்வியலுக்குத் தேவையான பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு, மின்சாரம், அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருள்களை தேவையான அளவு பாவனைக்கு வழங்குவதற்கு ஒழுங்கு செய்யாமல் இந்த அரச அலுவலர்கள் சமூகத் தவறு இழைத்திருக்கின்றார்கள் என்று அந்த மனுவில் சுட்டப்பட்டுள்ளது.**

**இந்த மனுவை அவசர விண்ணப்பமாகக் கருதி நாளை திங்கட்கிழமை அதனைப் பரிசீலனைக்கு எடுக்கவும், அது குறித்து காலதாமதமின்றி தொடர்ந்து விசாரணைகளை நடத்தி, மக்களுக்கு விரைந்து வாழ்வியலுக்கு அவசியமான – அடிப்படையான – விடயங்கள் கிடைக்கச் செய்வதற்கு வசதியாக இவ்விடயத்தை விசாரிப்பதற்கு நிரந்தர ஆயம் ஒன்றை அமைக்கும்படியும் உயர்நீதிமன்றத்தை மனுதாரர்களான சட்டத்தரணிகள் சங்கத்தினர் கோரியுள்ளனர்.**

**இதேசமயம் இதேபோன்ற அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் இலங்கை 'டிரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல்' அமைப்பாலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.**

**ஜனாதிபதி, பிரதமர், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் ஆளுநர், முன்னாள் ஆளுநர்கள் பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷமன், அஜித் நிவாட் கப்ரால், திறைசேரி செயலாளர், முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல போன்றோர் அதில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.**

**இந்த இரண்டு ரக மனுக்களும் நாளை ஒன்றாக உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட வாய்ப்புண்டு, இவற்றை விசேட கவனத்துடன் பரிசீலித்து, தன்னுடைய தற்றுணிவு அதிகாரங்களைப் பிரயோகித்து, நீதித்துறை வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்றை எழுதுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்று சட்ட வட்டாரங்கள் நம்புகின்றன. பார்ப்போம், உயர்நீதிமன்றம் தனது தனித்துவத்தைக் காட்டுமா என்பதை.**

## கோட்டாபய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தோடு அரசாங்கத்தினால் இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு திருத்தத்தில் 20 இல் காணப்பட்டதை விட ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின் போது வலியுறுத்துவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் உள்ள சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதனைத் அவர் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:–

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதனை உறுதி செய்வதாக வாக்குறுதியளித்து பொதுஜன பெரமுன 2019 இல் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் இன்று தேசிய பாதுகாப்பிற்கு என்னவாகியுள்ளது? அன்று என் மீது அனைவரும் குற்றஞ்சுமத்தினர்.

ஆனால் இன்று மிரிஹானையிலுள்ள ஜனாதிபதி இல்லம், ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என அனைத்தையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

இதனால் சாதாரணமாக எவரும் அந்த பகுதிகளுக்குச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது. இதுவா தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முறைமை என்று அரசாங்கத்திடம் கேள்வியெழுப்புகின்றேன். இன்று தேசிய பாதுகாப்பு பூச்சியமாக்கப்பட்டுள்ளது.

21ஆவது அரசமைப்புக் குறித்து பேச ஆரம்பித்த போது நாம் அதனை ஆதரிப்போம் எனப் பகிரங்கமாக அறிவித்தோம். எனினும் தற்போது நாட்டு மக்கள் உட்பட அனைவரதும் எதிர்பார்ப்பிற்கு முரணான அரசமைப்புத் திருத்தமே கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் பல திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகிய மூவரிடமும் நிறைவேற்றதிகாரம் பகிரப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்திற்கு அப்பால் நிறைவேற்றதிகாரத்தை பயன்படுத்த வேண்டிய அவசியம் சபாநாயகருக்குக் கிடையாது. எனவே இந்த விடயத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையே நாம் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வருகின்றோம்.

அங்கீகரிக்கப்பட்ட சிவில் அமைப்புக்களிலிருந்து மூவர் அரசமைப்புச் சபையின் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே 19 ஆம் திருத்தத்தில் காணப்பட்ட விடயமாகும்.

ஆனால் அரசாங்கத்தினால் இப்போது முன்வைக்கப்பட்டுள்ள திருத்தத்தில் அரசமைப்புச் சபையின் உறுப்பினர்களை சபாநாயகர் நியமிக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறெனில் சபாநாயகர் பெயர் குறிப்பிடும் மூவருடன் பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோரே அரசமைப்புச் சபையின் அங்கத்தவர்களாக இருப்பர்.

அவ்வாறெனில் அந்த அரசமைப்புச் சபை பொதுஜன பெரமுனவின் அரசியல் சபையாகவே காணப்படும். நாட்டு மக்கள் எதிர்பார்த்தது இதனை அல்ல. எனவே நாடாளுமன்றக் குழுநிலை விவாதத்தில் இதனை முன்வைப்போம்.

அதே போன்று அமைச்சர்களை நியமிக்கும் போதும் பல ஒழுங்முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற திருத்தமும் கொண்டு வரப்பட வேண்டும்.

20 ஐ விட 21 இல் ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்புத் திருத்தத்தில் எம்மால் இணக்கப்பாட்டை எட்ட முடியாத விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்திற்குள்ளும், வெளியிலும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்.

அவை தொடர்பில் மக்களுக்கும் தெளிவுபடுத்துவோம். புதிய அரசாங்கமே தற்போது மக்களின் தேவையாகவுள்ளது. அதற்கு எம்மால் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தப்பட்டு வரும் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

அதன் பிரதமர் யாராக இருந்தாலும், அவர் நிறைவேற்றுசபையின் ஊடாகவே தெரிவு செய்யப்பட வேண்டும். 21 இல் காணப்படும் நாட்டுக்கு நன்மை பயக்கும் விடயங்களுக்கு நாம் ஆதரவளிப்போம். – என்றார்.

## யாழ்.-கிளி.ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேவானந்தாவிப் முயற்சியால் அடுத்த வாரம் ஆரம்பிக்க ஏற்பாடாகியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு அரச அலுவலகங்களில் பணியாற்றுவதற்காகச் சென்றுவரும் நூற்றுக்கணக்கான அலுவலர்களின் நன்மை கருதி ஆரம்பிக்கப்படத் திட்டமிடப்பட்ட இந்த ரயில் சேவையைத் தொடங்குவது தொடர்பாக ரயில்வே அதிகாரிகள் நேற்று நேரில் வந்து ஆராய்ந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் அரச அலுவலர்கள் மற்றும் யாழ் பல்கலைக் கழகத்தின் அறிவியல்நகர் வளாக விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கான கோரிக்கை கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் றூபவதி கேதீஸ்வரன் ஊடாக, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கையை போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இரண்டு வாரங்களில் இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கான இணக்கத்தைப் பெற்றிருந்தார்.

இதனையடுத்து, இந்த ரயில் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக ரயில்வேத் திணைக்களத்திலிருந்து வருகை தந்திருந்த பிரதி பொது முகாமையாளர் ஏ.டி.ஜி.செனவிரத்ன, நேற்றுக் காலை யாழ்ப்பாணம் ரயில் நிலைய அதிபர் பிரதீபன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோடீஸ்வரன் றுஷாங்கன் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

அதன்பின்னர், அமைச்சரின் இணைப்பாளர் றுஷாங்கனுடன் இணைந்து ரயிலில் கிளிநொச்சிக்குப் பயணமான பிரதிப் பொது முகாமையாளர், அங்கு வட பிராந்திய ரயில்வே சேவைகள் பணிப்பாளர் விசுந்துர மற்றும் கிளிநொச்சி மாவட்ட ரயில் நிலைய அதிபர் சிகாமணி ஆகியோருடனும் மேலும் கலந்துரையாடல்களை நடாத்தினார்.

தொடர்ந்து, அவர்களுடன் இணைந்து கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்குச் சென்ற அவர், அங்கு மாவட்டச் செயலாளர் றூபவதி கேதீஸ்வரனைச் சந்தித்து ரயில் சேவைக்கான ஏற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடல்களை நடாத்தினார்.

அடுத்த வாரமே யாழ் – கிளிநொச்சி ரயில் சேவையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்த அவர், விரைவில் சேவை ஆரம்பிக்கும் திகதியை அறியத்தருவதாகவும் தெரிவித்துவிட்டுக் கொழும்பு திரும்பினார்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையிலிருந்து கிளிநொச்சி அறிவியல்நகர் வரையில் நடாத்தப்படவுள்ள இந்தச் சேவையின் மூலம் அரச அலுவலர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் என தினசரி சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் பயனடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சாதாரண இலங்கையர்கள் அனுபவிக்கின்ற இன்னல்களை பார்ப்பது கவலையாகவுள்ளது

## கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினொன தெரிவிப்பு

இலங்கையில், புறத்தாக்கங்களால் பொருளாதார நெருக்கடி அதிகரித்துள்ளது. அதன் விளைவாக ஒவ்வொரு நாளும் சாதாரண இலங்கையர்கள் அனுபவிக்கும் இன்னல்களைப் பார்ப்பது கவலையாகவுள்ளது.

பெருந்தொற்றின் போதும், சுமார் கடந்த 70 ஆண்டுகளாகவும் நாம் செய்ததைப் போன்றே, இந்த நெருக்கடி நேரத்திலும் கனேடியர்கள் தமது ஆதரவை வழங்கியுள்ளனர் என இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினொன் தெரிவித்தார்.

இதனோடு தொடர்புட்ட வகையில் கனடா இலங்கையின் மீளிணக்கச் செயன்முறைக்கு ஆதரவளிப்பதுடன், பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்கள் சமூகங்களாகிய யாருடைய ஒருங்கிணைப்பு நாட்டின் வெற்றிக்கு அவசியமானதோ அவர்களின் வலுவூட்டலுக்கும் ஆதரவளிக்கின்றது.

இது பலமான மக்களிடையிலான இணைப்பையும் நீண்ட பொருளாதாரப் பிணைப்பையும் கட்டியெழுப்புகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கனேடிய தினத்தை முன்னிட்டு இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினொன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது –

கனடா தின வாழ்த்துக்கள். இன்று கனேடியர்கள் ஒன்றாக எமது நாட்டின் சாதனைகளைக் கொண்டாடுவதுடன் அவ்வாறு செய்வதில் ஒரு மகிழ்ச்சி உள்ளதாக நம்புகின்றோம்.

ஒரு சிறந்த கனடாவைக் கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்த்துள்ளதால் நாம் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பிலும் நாம் சிந்திக்கின்றோம்.

கனடா தினமானது, வகைமாதிரியாக குடும்பம், நண்பர்கள் மற்றும் சன சமூகத்தில் கவனம் குவிப்பதுடன் முறைசார் ரீதியாக கொண்டாடப்படுகிறது. கனேடியர்களின் அனைத்தையும் உள்ளடக்கிய தேசியவாத உணர்வை இது பிரதிபலிக்கின்றது.

அவர்களது தனிப்பட்ட அடையாளங்களின் பல்வகையான பிரஜா நிலைகளை பல்வேறுபட்ட படைகளை மப்பிள் இலையின் கீழ் கனேடியர்களாக அனைவரையும் ஒன்றுசேர்க்கும் உணர்வுக்குள்ளான ஒருங்கிணைப்பை இயலச் செய்கிறது.

கொள்ளைநோயின் கொடுமையான கட்டமானது, நன்றிக்குரிய முறையில் எங்களுக்குப் பின்னால் சென்றுவிட்ட அதேவேளையில், உலகம் எமது பதிற்செயற்பாட்டில் எம்மையெல்லாம் ஒன்றாக மீண்டும் பணியாற்ற கேட்டுநிற்கும் வேறுபட்ட சிக்கலான சவால்களை உலகம் எதிர்கொள்கிறது.

உலகளாவிய விளைவுகளின் பெரிய நெருக்கடிகள் உலகத்தைச் சூழ எழுந்துள்ளன. மிகவும் குறிப்பிடத்தக்க முறையில் உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு உள்ளது.

இலங்கையில், இந்த புறத்தாக்கங்களால் பொருளாதார நெருக்கடி அதிகரித்துள்ளது. அதன் விளைவாக ஒவ்வொரு நாளும் சாதாரண இலங்கையர்கள் அனுபவிக்கும் இன்னல்களைப் பார்ப்பது கவலையாகவுள்ளது.

பெருந்தொற்றின் போதும், சுமார் கடந்த 70 ஆண்டுகளாகவும் நாம் செய்ததைப் போன்றே, இந்த நெருக்கடி நேரத்திலும் கனேடியர்கள் தனது ஆதரவை வழங்கியுள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்துடன் இணைந்து, அத்தியாவசிய மருந்துகள் மற்றும் பொருள்களின் கொள்வனவிற்கான நிதியினை நாம் வழங்குகின்றோம்.

தேசிய பாடசாலை உணவு நிகழ்ச்சிக்கு உடனடியாக தேவையாகவுள்ள அரிசியினை கொள்வனவு செய்வதற்கு உலக உணவுத் திட்டத்துடனும் கனடா பணியாற்றுகின்றது.

நெருக்கடி அதிகரிக்கின்ற நிலையில், ஐக்கிய நாடுகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை குழு செம்பிறைச் சங்கங்களினால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு பதிலளிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தி வருகின்றோம்.


இந்த சவால்மிக்க நேரங்களை ஒரு மிகவும் நிலையான, வளமான அத்துடன் இந்தக் குறிப்பிடத்தக்க நாட்டினதும் அதன் ஆற்றலுடைய மக்களினதும் பெரும் இயலுமையை முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒரு அனைத்துமடங்கிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு சந்தர்ப்பமாக்குவதற்கான பல இலங்கையர்களின் விசேட ஆர்வத்தை நான் பாராட்டுகின்றேன்.

பல்வேறுபட்ட நிலைமைகளின் பொழுதும்கூட கனடாவில் நாம்கூட இது தொடர்பான ஒரு சட்டவாக்கத்தை அங்கீகரித்து முடிவுக்குக் கொண்டுவருதல் உட்பட சுதேசிய மக்களுடனான மீளிணக்கத்தை முன்கொண்டு செல்வதனால் எல்லோருக்குமான ஒரு சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாமும் உழைக்கின்றோம்.

உலகம் முழுதிலும் இருந்து நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான புலம்பெயர்வாளர்களைத் தொடர்ந்து வரவேற்றுக்கொண்டிருந்த பொழுதிலும் எமது அழகான நாட்டின் பூர்வகுடிகளின் வழித்தோன்றல்களை ஏற்றுக்கொண்டு கனேடிய சமூகத்தில் முழுமையாகக் கொண்டாடுவதை நிச்சயப்படுத்த நாம் விரும்புகின்றோம்.

இதனோடு தொடர்புபட்ட வகையில் கனடா இலங்கையின் மீளிணக்கச் செயன்முறைக்கு ஆதரவளிப்பதுடன், பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட சன சமூகங்களாகிய யாருடைய ஒருங்கிணைப்பு நாட்டின் வெற்றிக்கு அவசியமானதோ அவர்களின் வலுவூட்டலுக்கும் ஆதரவளிக்கின்றது. இது பலமான மக்களிடையிலான இணைப்பையும் நீண்ட பொருளாதாரப் பிணைப்பையும் கட்டியெழுப்புகின்றது. உலகம் எதிர் கொண்டிருக்கும் பல சவால்களினிடையே அவற்றிலெல்லாம் மிகவும் ஆழமான ஒன்றை நாம் மறந்துவிட முடியாது. காலநிலை மாற்றம்.

காலநிலை மற்றும் சுற்றாடல் செயற்பாடானது, கனடாவுக்கு ஒரு முன்னுரிமையான விடயமாகத் தொடர்ந்துள்ளதுடன் நாம் உலகளாவிய சுற்றாடல் வசதிப்படுத்தல் மற்றும் பசுமைக் காலநிலை நிதியம் ஆகிய இலங்கைக்கு வசதியளிப்பவர்களுக்கு



நாம் தொடர்ந்து பங்களிப்புச் செய்கின்றோம். அண்மைய ஆண்டுகளில் ஓர் உள்ளூர் சுற்றாடல் முனைப்புக்காக நாம் எமது ஆதரவை அதிகரித்துள்ளோம்.

கனடாவை வடிவமைப்பதிலும், முன்னேற்றுவதிலும் தொடர்ந்து செயற்படும் இலங்கைப் பாரம் பரியத்தைச் சேர்ந்த பல கனேடியர்கள் பற்றி ஒரு குறிப்புடன் முடிக்காவிடில் அது ஒரு பெரிய கவனக்குறைவாக இருக்கும். பல்வகைத் தன்மை, ஐக்கியம் என்பவற்றுக்கான ஒரு தினமாக ஏன் நாம் கனடா நாளைக் கொண்டாடு கின்றோம் என அவர்கள் சான்று காட்டுவர். இன்னும் அனைவரையும் உள்ளடக்கிய ஓர் எதிர்காலத்துக்காக நாம் நம்பியிருப்போமாக.

கனடா தின வாழ்த்துக்கள்! என அந்த அறிக்கையில் கனேடிய உயர்ஸ்தானிகர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தெவிநுவர பிரதேசத்தில் ஐவரை படுகொலை செய்த குற்றச்சாட்டில் அறுவருக்கு மரண தண்டனை விதிப்பு!

தெவிநுவர பிரதேசத்தில் ஐந்து பேரை சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் குற்றம் சாட்டப்பட்ட 6 பேரும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டதை அடுத்து மாத்தறை மேல் நீதிமன்ற நீதிபதி தாமர தென்னகோன் மரண தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

2000 ஆம் ஆண்டு தெவிநுவரவில் வான் மீது ஒரு கும்பல் துப்பாக்கிச் சூடு நடத்தி ஐந்து பேர் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த கொலை தொடர்பாக 15 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களில் 5 பேர் விடுதலை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். இதேவேளை, 22 வருட நீதிமன்ற விசாரணையின் போது நான்கு சந்தேகநபர்கள் உயிரிழந்துள்ளனர்.

மிகுதியாய் இருந்த ஆறு பேருக்கும் வியாழக்கிழமை நீதிமன்ற விசாரணையின் போது மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

## தொழில்நுட்ப அமைச்சின் செயலராக ஜயந்த டி சில்வா நியமிக்கப்பட்டார்!

*தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக ஜயந்த டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.*

*அவருக்கான நியமனக் கடிதம், வியாழக்கிழமை காலை கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தால் கையளிக்கப்பட்டுள்ளது.*

## 10 வகையான அத்தியாவசிய மருந்துகள், தடுப்பூசிகள் ஒரு வாரத்துக்கு மாத்திரமே கையிருப்பில் உள்ளனவாம்

10 வகையான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளின் இருப்பு ஒரு வாரத்துக்கு மாத்திரமே போதுமானதாக இருக்கும் எனவும் சகல வைத்தியசாலைகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் விலங்குகள் கடித்தால் போடப்படும் 'ரேபிஸ்' தடுப்பூசியின் கையிருப்பும் போதுமானதாக இல்லை எனவும் சுகாதார பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

தீவிர சிகிச்சைப் பிரிவிலுள்ள நோயாளிகளுக்கு வழங்கப்படும் தடுப்பூசியும் இன்னும் ஒரு வாரத்துக்கு மாத்திரமே போதுமானதாக இருக்கும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இலங்கைக்கு அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று விரைவில் முன்னெடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரயில்வே ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு; பெரும் திண்டாட்டத்தில் மக்களின் நிலை!

ரயில்வே காவலர்கள், ரயில் என்ஜின் சாரதிகள் உட்பட ரயில்வே ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) ஆரம்பித்திருந்தனர் என ரயில்வே தொழிற்சங்கங்கள் தெரிவித்திருந்தன.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக பொது போக்குவரத்தையே நம்பி மக்கள் அன்றாட வாழ்க்கையை தற்போது நடத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் இவ்வாறான திடீர் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டங்கள் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் உரிய தரப்பினருடனான பேச்சுக்களை அடுத்து நேற்று முன்தினமே போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

# மருத்துவக் கதிர்



## கண்ணழுத்த நோய்

பல நோய்க்காரணிகளை உள்ளடக்கிய கண் கோளாறுகளின் ஒரு தொகுதியே கண்ணழுத்த நோய் என்று அழைக்கப்படுகிறது.

உள்விழி அழுத்தத்தால் உண்டாகும் நரம்புக் கோளாறே இதன் நோய்க்கூறு ஆகும். கண்ணுக்குள் அதிகமாகும் திரவ அழுத்தம் பொதுவாக இதனோடு தொடர்புடையது. அதிகமான உள்விழி அழுத்தமே (21 mmHg or 2.8 kPa –க்கு மேல்) முக்கியமான மாறுபடும் ஆபத்துக் காரணியாகும். ஆயினும் பலருக்குப் பல ஆண்டுகளாக கண்ணழுத்தம் இருந்து வந்தாலும் எந்தச் சிதைவும் ஏற்படாது. ஒரு சிலருக்குக் குறைந்த கண் அழுத்தத்திலும் கண் சிதைவு உண்டாகும். சிகிச்சை அளிக்காவிட்டால் விழிநரம்புக்கு சேதாரம் ஏற்பட்டு நாளடைவில் பார்வையிழப்பு உண்டாகும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

**கண்ணழுத்த நோயின் வகைகள்**

கண்ணழுத்த நோயில் நான்கு முக்கிய வகைகள் உண்டு

நாட்பட்ட திறந்த – கோண கண்ணழுத்த நோய் – இதுவே பரவலான வகை. இது மெதுவாக அதிகரிக்கும்.

முதன்மை மூடிய – கோண கண்ணழுத்த நோய் – இது அபூர்வமானது. மெதுவாகவும் (நாட்பட்ட) விரைவாகவும் (கடுமையானது) திடீரென உண்டாகும். வலிதரும் கண்ணழுத்தம் ஏற்படும்.

இரண்டாம்நிலை கண்ணழுத்த நோய் – இது காயத்தாலும் விழிநடு படல அழற்சியாலும் ஏற்படும்.

வளர்ச்சிநிலை அல்லது பிறவி கண்ணழுத்த நோய் – இதுவும் மிக அரிய வகை. ஆனால் ஆபத்தானது. இது பிறப்பிலேயே இருக்கும் அல்லது பிறந்து சிறிது காலத்தில் உருவாகும். இது விழியின் ஒரு அசாதாரண நிலையால் ஏற்படுகிறது.

**நோயறிகுறிகள்**

நாட்பட்ட கண்ணழுத்த நோய்: இவ்வகை நோய் மிகவும் மெதுவாக அதிகரிப்பதால் காணும்படியான எந்த அறிகுறியும் இருப்பதில்லை. முதலில் பக்கப்பார்வையே பாதிக்கப்படுவதால் தங்கள் பார்வை பாதிக்கப்பட்டுள்ளதாக யாரும் அறிவதில்லை. விழியின் புற வட்டத்தில் இருந்து மையத்தை நோக்கி மெதுவாகப் பார்வை இழப்பு ஏற்படுகிறது. பார்வை மாற்றம் வயதோடு தொடர்பு உடையது. இதனால் உங்கள் கண்களை முறையாகச் சோதனை செய்து கொள்ள வேண்டும்.

மூடிய – கோண கண்ணழுத்த நோய்: அறிகுறிகள் வேகமாக உருவாகின்றன, அவையாவன:

கடுமையான வலி
கண் சிவப்பு
தலைவலி
கண்பகுதியில் தோல் மென்மையாதல்
ஒளியைச் சுற்றி வானவில் போன்ற வளையம் தென்படுதல்
பார்வை மங்குதல்

ஒரு கண்ணிலோ அல்லது இரண்டிலுமோ பார்வை இழப்பு வேகமாக அதிகரித்தல்.

இரண்டாம் நிலை கண்ணழுத்த நோய்: இது பிற காரணங்களாலோ அல்லது விழிநடுப்படல அழற்சி போன்ற கண்காயங்களாலோ உருவாகும். பொதுவாகக் கண்ணழுத்த நோயின் அறிகுறிகளும் பிற கண் நோய் அறிகுறிகளும் ஒன்று போலவே தோன்றும். உதாரணமாக விழிநடுப்படல அழற்சியால் கண் மற்றும் தலைவலி உண்டாகும்.

வளர்ச்சிநிலை கண்ணழுத்த நோய்: இளம் வயது காரணமாக இதன் அறிகுறிகளைக் கண்டறிவது கடினம். இருப்பினும் கீழ்வரும் அறிகுறிகள் தென்படலாம்:

கண்ணழுத்தம் காரணமாக கண்கள் பெரிதாகலாம்
ஒளிக்கூச்சம்
கண்களில் நீர் வடிதல்
கண் துடிப்பு
மாறுகண்

**காரணங்கள்**

கண்ணின் ஒரு பகுதியில் ஏற்படும் தடங்கலே கண்ணழுத்த நோய்க்குக் காரணம். தடையின் காரணமாகத் திரவம் கண்ணில் இருந்து வடிய முடிவதில்லை. இதனால் உள்விழி அழுத்தம் அதிகரிக்கிறது.

**இப்பாதிப்போடு தொடர்புடைய ஆபத்தான காரணிகள்**

வயது: வயதானவர்களுக்குக் கண்ணழுத்தம் உண்டாகும் அபாயம் அதிகம்.

இனம்: ஆபிரிக்க அல்லது ஆபிரிக்க கரிபியன் இன மூலம் உடையவர்களுக்கு நீடித்தத் திறந்த – கோண கண்ணழுத்த நோய் உண்டாகும் அபாயம் அதிகம். ஆசிய இன மூலம் கொண்டவர்களுக்குக் கடும் மூடிய – கோண கண்ணழுத்த நோய் உண்டாகும் ஆபத்து உள்ளது. மருத்துவ வரலாறு – நீரிழிவு நோய் கொண்டவர்களுக்குக் கண்ணழுத்த நோய் ஏற்படும் வாய்ப்பு கூடுதலாகும். கண்ணில் மிகை அழுத்தம் இருந்தால் நீடித்த திறந்த – கோண கண்ணழுத்த நோய் உண்டாகும்.

குடும்ப வரலாறு: பெற்றோர், உடன்பிறந்தோர் ஆகிய குடும்ப உறுப்பினர்களுக்குக் கண்ணழுத்த நோய் இருந்தால் நோய் ஏற்படும் அபாயம் அதிகம்.

**நோய் கண்டறிதல்**

கண் பரிசோதனை செய்து கண்ணழுத்த நோயைக் கண்டறியலாம்.

**சோதனைகள்**

உள்விழி அழுத்தத்தை அழுத்தமானியால் அளக்கலாம்.

கண்ணின் அளவு, வடிவம் ஆகியன நோக்கப்படும்

முன்விழியறை கோணச்சோதனை மற்றும் விழி நரம்பு ஆய்வு மூலம் சிதைவுகள் ஆராயப்படுகின்றன.

நோய் மேலாண்மை

கண் சொட்டு மருந்துகள் மூலம் உள்விழி அழுத்தத்தைக் குறைக்கலாம்.

இது குறிப்பான தகவல் மட்டுமே. சிகிச்சைகளுக்கு உங்கள் மருத்துவரையே கலந்தாலோசிக்க வேண்டும்.

**தடுப்பு முறை**

பார்வை இழப்பே கண்ணழுத்த நோயின் முக்கிய சிக்கலாகும். எனவே ஆரம்பத்திலேயே கண்டறிந்து மருத்துவம் அளிப்பது முக்கியமானது.

## பின்மாதவிடாய்க் குருதிப்போக்கு

மாதவிலக்கு நின்ற பின் குறைந்தபட்சம் 12 மாதங்களுக்கு இரத்தப்போக்கு தொடருவது பின் மாதவிடாய்க் குருதிப்போக்கு ஆகும். ஒரு பெண் மாதவிடாய் நிற்கும் கட்டத்தை அடைந்த பின் (பொதுவாக 45 – 49 வயது) 12 மாதங்களுக்கு மாதவிலக்கு வராமல் இருந்தால் அவருக்கு மாதவிலக்கு நின்று போய் விட்டது என்று கருதலாம்.

மாதவிடாய் நின்ற பின் பொதுவாக இரத்தப் போக்கு இருப்பதில்லை. அவ்வாறு இருந்தால் மருத்துவரை அணுகி, இரத்தக் கறை பட்டாலும், வேறு கடுமையான மருத்துவ பிரச்சினைகள் இல்லை என்பதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

**நோயறிகுறிகள்**

பின்மாதவிடாய்க் குருதிப்போக்கிற்குப் பல ஆரோக்கியப் பிரச்சினைகள் காரணமாக இருக்கலாம். அவற்றில் அடங்குவன:

பெண்மை நீர்ம அளவு குறைவு படுவதால் யோனி அல்லது கருப்பையின் புறணி அழற்சியுறுதல் அல்லது மெலிதல்.

சவ்வுக்கழலை: கருப்பை வாய் அல்லது கருப்பையில் விழுது போன்ற சவ்வு வளர்ச்சி (பொதுவாகப் புற்றாக இருக்காது).

இயக்குநீர் மாற்று சிகிச்சையால் கருப்பைப் புறணி கட்டியாதல்

கருப்பை அல்லது கருப்பை வாயின் அசாதாரண நிலை

யோனியின் புறணி தடித்தல்: மிகை பெண்மை இயக்குநீரும் மிகக் குறைந்த அளவு சினையியக்கு நீரும் இருப்பதன் விளைவாக யோனியின் புறணி தடித்தல் இதனால் இரத்தப் போக்கும் இருக்கலாம்.

யோனிப் புற்று: பின்மாதவிடாய் இரத்தப் போக்கு யோனிப் புற்று நோயின் அறிகுறியாகவும் இருக்கலாம்.

பிற காரணங்களில் அடங்குவன: கருப்பை அல்லது கருப்பை வாய்த் தொற்று, இரத்த மெலிவூட்டிகள் போன்ற சில மருந்துகள், பிற வகை புற்று நோய் ஆகியவற்றாலும் இரத்தப் போக்கு ஏற்படலாம்.

**நோய்கண்டறிதல்**

சரியான காரணத்தைக் கண்டறிய மருத்துவர், மருத்துவ வரலாற்றைக் கேட்பதோடு கருப்பைவாய்ச் சோதனையும் (பேப் சோதனை) செய்வார். மேலும் பரிந்துரைக்கப்படும் சோதனைகள் வருமாறு:

கருப்பைக் கேளா ஒலி சோதனை
கருப்பைப் புறணி திசுச்சோதனை
கருப்பை அகநோக்கல்

**நோய் மேலாண்மை**

குருதிப்போக்குக்கான காரணத்தின் அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

சவ்வுக்கழலையால் இரத்தப்போக்கு இருந்தால் அதை அகற்ற அறுவை சிகிச்சை தேவைப்படும்.



கருப்பை அகப்படல மெலிவுக்கு சினையியக்கு நீர் சிகிச்சை மருந்துகள் அல்லது கருப்பை அகப்படல தடிப்பு அறுவை சிகிச்சையால் அகற்றல்.

கருப்பை அகப்படல மிகைத் திசு வளர்ச்சி இருந்தால் மகப்பேறு மருத்துவரை அணுகி, தொடர் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

இயக்குநீர் மாற்று சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருந்தால் மருத்துவர் மருந்து உட்கொள்ளும் அளவை நிலைமைக்குத் தகுந்தபடி குறைக்கலாம்.

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** English for all **Sunday the 03rd of July 2022**


**We welcome students' articles in word for publication**

-Editor-

kalaikkathiredu@gmail.com

## BETTER EXPRESSION TO IMPRESS YOUR FRIENDS

### *Match the remarks under (A )and the better expressions to convey the same idea under (B)*

(A)

1. I'm very busy.
2. Jayanthi is very beautiful.
3. Your saree must be very expensive.
4. Rajani is a silly guy.
5. I' ve a severe headache.
6. My stomach is upset.
7. David reads a lot .
8. I'm fond of sweet things.
9. You're absolutely right.
10. Chinese phones are cheap.

(B)

(a) I have a sweet tooth.
(b) My head is splitting.
(c ) My hands are full.
(d) Yes, it cost me a fortune.
(e) Yes, they are dime a dozen.
(f) Yes, she 's gorgeous.
(g) My tummy is rebelling.
(h) You hit the nail on the head.
(i) He 's a vegetable.
(j) He's a book worm.



ANSWERS : 1-c/ 2- f / 3- d /4-i / 5-b/ 6-g / 7- j/ 8-a/ 9- h / 10- e/

## Choose the correct word from the list and fill in the blanks.

***antiques/ bees / crude oil/ fish / fruits/ grapes / plane / reservoir / soldiers / studio/***

1. In an aquarium we can see colour..................
2. ...................... lives in barracks.
3. They grow ..................... in an orchard .
4. There are beautiful paintings I that ..............
5. Sweet ................. grow in a vineyard.
6. ..................... are displayed in a museum.
7. A ..................... is kept in a hanger.
8. Water from a .................. is used for irrigation.
9. ...................... purified in a refinery .
10. ..................... in an aviary

ANSWERS - 1- fish /2- soldiers /3- fruits. / 4- studio /5-grapes/ 6- antiques/ 7--plane/ plane 8- reservoir / 9-- Crude oil 10- Bees /

# Match the expressions with their meanings

1. Don't hit below the belt.
2. Cricket is not my cup of tea.
3. Kamala is green eyed .
4. Today is a red letter day.
5. The bathroom is slick and span.
6. Ravi left the place with bag and baggage.
7. The ministers took wings to Paris.
8 The thief was caught red handed.
9. Uncle Arun visits us once in a blue moon .
10. The workers are up in arms against the new labour laws.

a) He was caught at the nick of the time.
b) It is very clean.
c ) The flew to Paris
d) I' m not interested in it.
e) They strongly oppose it.
f) Don't play foul.
g ) He does'nt come very often .
h) She' is jealous .
i) He went away with all his belongings.
j) It 's an important day.



ANSWERS :- 1.- f / 2.- d / 3- h / 4.- j/ 5- b/ 6- i/ 7- c / 8- a / 9- g / 10- e /



Felidae species exhibit the most diverse fur pattern of all terrestrial carnivores. Cats have retractile claws, slender muscular bodies and strong flexible forelimbs. Their teeth and facial muscles allow for a powerful bite. They are all obligate carnivores, and most are solitary predators ambushing or stalking their prey. Wild cats occur in Africa,

# THE CAT FAMILY

Europe, Asia and the Americas. Some wild cat species are adapted to forest habitats, some to arid environments, and a few also to wetlands and mountainous terrain. Their activity patterns range from nocturnal and crepuscular to diurnal, depending on their preferred prey species.

Reginald Innes Pocock divided the extant Felidae into three sub-families: the Pantherinae, the Felinae and the Acinonychinae, differing from each other by the ossification of the hyoid apparatus and by the cutaneous sheaths which protect their claws. This concept has been revised following developments in molecular biology and techniques for analysis of morphological data. Today, the living Felidae are divided in two subfamilies: the Pantherinae and Felinae, with the Acinonychinae subsumed into the latter. Pantherinae includes five Panthera and two Neofelis species, while Felinae includes the other 34 species in ten genera.

The first cats emerged during the Oligocene about 25 million years ago, with the appearance of Proailurus and Pseudaelurus. The latter species complex was ancestral to two main lines of felids: the cats in the extant subfamilies and a group of extinct cats of the subfamily Machairodontinae, which include the saber-toothed cats such as the Smilodon. The "false sabre-toothed cats", the Barbourofelidae and Nimravidae, are not true cats, but are closely related. Together with the Felidae, Viverridae, hyaenas and mongooses, they constitute the Feliformia.

**Teachers can open the door, but you must enter it yourself - Chinese proverb**

# The Dollar: The World's Currency



The dollar's role as the primary reserve currency for the global economy allows the United States to borrow money more easily and impose painful financial sanctions. But some experts say the costs to areas such as the Rust Belt are too high to bear.

***Summary***

* The dollar has been the world's principal reserve currency since the end of World War II and is the most widely used currency for international trade.
* High global demand for dollars allows the United States to borrow money at a lower cost and amplifies the power of its sanctions, but it also hurts U.S. exports and costs jobs.
* Other currencies, including the euro and Chinese renminbi, remain far behind the dollar in global usage.

***Introduction***

Since the end of World War II, the dollar has been the world's most important currency. It is the most commonly held reserve currency and the most widely used currency for international trade and other transactions around the world. The centrality of the dollar to the global economy confers some benefits to the United States, including borrowing money abroad more easily and extending the reach of U.S. financial sanctions.

But some experts argue that dollar supremacy comes at a cost. Increased foreign demand for U.S. bonds bids up the dollar and makes U.S. exports less competitive, resulting in trade deficits and lost jobs. And the dollar's role in many global transactions puts pressure on the U.S. Federal Reserve to act as the world's lender of last resort during economic crises, such as the one triggered by the coronavirus pandemic. Despite the concerns about the dollar's power, many experts say it is unlikely that the greenback will be replaced as the leading reserve currency any time soon.

***What Is the U.S. Federal Reserve?***

by James McBride and Anshu Siripurapu

What is a reserve currency?

A reserve currency is a foreign currency that a central bank or treasury holds as part of its country's formal foreign exchange reserves. Countries hold reserves for a number of reasons, including to weather economic shocks, pay for imports, service debts, and moderate the value of its own currency. Many countries cannot borrow money or pay for foreign goods in their own currencies—since much of international trade is done in dollars—and therefore need to hold reserves to ensure a steady supply of imports during a crisis and assure creditors that debt payments denominated in foreign currency can be made.

By buying and selling currencies on the open market, a central bank can influence the value of its country's currency, which can provide stability and maintain investor confidence. For instance, if the value of the Brazilian real starts to fall during an economic downturn, the Central Bank of Brazil can step in and use its foreign reserves to bid up its value. Conversely, countries can intervene to stop their currencies from appreciating and make their exports cheaper.

Most countries want to hold their reserves in a currency with large and open financial markets, since they want to be sure that they can access their reserves in a moment of need. Central banks often hold currency in the form of government bonds, such as U.S. Treasuries. The U.S. Treasury market remains by far the world's largest and most liquid—the easiest to buy into and sell out of—bond market.

The International Monetary Fund (IMF), the body responsible for monitoring the international monetary system, recognizes eight major reserve currencies: the Australian dollar, the British pound sterling, the Canadian dollar, the Chinese renminbi, the euro, the Japanese yen, the Swiss franc, and the U.S. dollar. The U.S. dollar is by far the most commonly held reserve currency, making up more than 60 percent of global foreign exchange reserves.

China has by far the most reported foreign exchange reserves of any country, with more than $3 trillion. Japan, in second place, has around $1.3 trillion. India, Russia, Saudi Arabia, Switzerland, and Taiwan also have large reserve holdings. The United States currently holds roughly $140 billion worth of assets in its pool of reserves, including $40 billion worth of foreign currencies.

# Currency Management

The Central Bank of Sri Lanka has the sole right and authority to issue currency in Sri Lanka which includes both currency notes and coins as stipulated in the Monetary Law Act No. 58 of 1949. In fulfilling this task, the Bank is entrusted with designing, printing/minting and distributing of Sri Lanka's bank notes and minting of coins. The purpose of currency management is to build and maintain public confidence in the currency by preserving its value and integrity and by making available adequate stocks to meet the demand for currency, which is essential for the proper functioning of the economy.

***Design and Production***

It takes several months to design notes / coins when it is a new series. Notes / coins are designed by persons appointed by the Central Bank or the note printers / minters and it is mandatory to obtain approval from the Monetary Board of the Central Bank and the concurrence of the Minister of Finance for the denominations, designs and other characteristics for bank notes and for prescribing metals, weight, size, design, denominations and other characteristics for coins. Once the designs are approved, the Bank contracts the printing of the notes / minting of coins to a currency note printing / coin minting company after adhering to approved procurement procedures and guidelines.

***Distribution***

The Central Bank of Sri Lanka maintains and supplies adequate currency notes / coins in order to meet the demand from the public and businesses while commercial banks return currency to the Central Bank of Sri Lanka in the form of currency deposits. These currency notes are verified by the Currency Note Processing System (CNPS) through high-speed note processing machines and the unfit notes are shredded online while serviceable notes are processed and reissued to commercial banks. Notes counted using desktop counting machines are also issued to commercial banks for circulation, while unserviceable notes are destroyed by the Central Bank of Sri Lanka.

***Clean Note Policy***

In order to ensure notes in circulation are of good quality Central Bank of Sri Lanka implemented the clean note policy and conduct awareness programmes to educate public on good handing practices of currency. As a result the quality standards of currency in circulation have improved to a satisfactory level.

***Good Handling Practices of Currency***

***Notes***

• Keep notes in the wallet/purse without folding/crushing according to the order of denomination to identify and handle them easily.

• Do not place notes in places where they can be exposed to dampness or heat conditions or harm by insects.

• Do not touch or handle notes with dirty hands.

• Do not damage or deface notes by cutting, drawing or writing on notes.

• Use clean notes for transactions and let others feel how concerned you are about cleanliness.

• Clean notes build and preserve a good image of our nation.

***Good Handling Practices of Coins***


• Maintain a special container at home to keep coins received on daily transactions.

• Carry those coins in the container for daily transactions.

• Exchange accumulated coins with a grocery store from where you purchase regular needs or deposit with banks or Central Bank Head Office.

• Educate children of the importance of financial discipline for a successful future.

# இலக்கிய நயம்




பொதுவாகவே அன்றிலிருந்து இன்றுவரை தமிழில் வந்த இலக்கிய வகைகள், இலக்கியம் கடந்து கால வோட்டத்தில் வந்த இன்றைய சினிமாவரையான பகுதி வரை காதல், வீரம் என்ற இரண்டு கருப்பொருள்கள் எல்லாவற்றிலும் புகுந்துவிட்டது. உண்மையை சொல் லப்போனால் இந்த காதல், வீரம் ஆகிய இரண்டும் சங்க கால மக்களின் பெரு வாழ்க்கைமுறையில் அவர்களின் வாழ்வியங்களாகவே இருந்துவந்தமையும், அவற் றையே இலக்கியங்களும் பாடியமையினாலேயே இந்த மரபணுப்பாய்ச்சல் இற்றைவரை எமக்குள்ளும் பாய்ந்து கொண்டிருக்கின்றது.

சரி. காதலை சொல்லமுதல் அந்த வாழ்க்கை முறை பற்றி கொஞ்சம் தொட்டுவிட்டு போவோமே! சங்ககாலத் தில் ஆண்களும் பெண்களும் சம அந்தஸ்துடனேயே நோக்கப்பட்டார்கள் என்பதுடன், இலக்கியம் வாயிலாக ஆழநோக்கினால் இந்தக்காலத்தில் பெண் அடிமைத் தனம், அபரிதமான பெண்மைக் கட்டுப்பாடுகள் இருக்க வில்லை. அனைவருக்கும் உரிய சுதந்திரம் கொடுக்கப் பட்டது.

ஆண்களுடன் பெண்கள் சகஜமாகப்பழகினார்கள், ஆனால் அவர்கள் அந்த சுதந்திரத்தை துஷ்பிரயோகம் செய்யவில்லை. கற்புநெறியில் சீரிய வாழ்க்கை முறையை கொண்டவர்களாகவே இருந்தார்கள். ஆண் என்றால் அவன் வீரனாக இருக்கவேண்டும் என்பதே பெண்ணின் எதிர்பார்ப்பாக இருந்தது.

நிலத்தின் தன்மைகளைக்கொண்டு அவர்கள் வாழ்ந்து வந்த இடத்தை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாக வகுத்து வாழ்ந்து வந்தார்கள். நிலத்தின் தன்மைகள், அவற்றின்மேலான தொழில், அவற்றின் மூலம் உண்டாகும் இயல்புகள் என்பன இலக்கியங்களில் தாக்கத்தை செலுத்தின.

பொதுவாகவே சங்க கால காதல் இலக்கியங்களுக்கு ஆழமான ஒரு வரையறை உண்டு. அந்த வரையறை உடைபட்டால் அது காதல் இலக்கியமாக (அகம்) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தம்முள் கூடும் இன்னம் இன் தென்று சொல்லாமை, பெயர்சுட்டாமை, ஒவ்வாத காதல், முரணான காதல்கள் (பொருந்தாக்காமம்) அகம் என்று கொள்ளல் ஆகாது. இப்படி நிறைய விதிகளும் உண்டு.

இதுகுறித்து ஆழமாக போனாலும் பக்கங்கள் நிறைந்து விடும் சரி..விடயத்திற்கு வருவோம் தேர்ந்தெடுத்த காதல் தேன் சொட்டும் செய்யுள்கள் சிலவற்றை பார்ப்போம்.

மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத் தில் உண்டான காதல் இது ஒரு பெண் காதலினால் படும் இன்பவலியை அழகாக எடுத்துரைக்கின்றார் இந்த செய்யுளை இயற்றிய கபிலர்.

**வேரல் வேலி வேர் கோட் பலவின்**
**சாரல் நாட செவ்வியை ஆகுமதி**
**யார் அஃது அறிந்திசினோரே சாரல்**
**சிறு கொட்டுப் பெரும் பழம் தூங்கியாங்கு, இவள்**
**உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே**

சிறிய ஒரு கிளையில் பாரம் தாங்காமல் தொங்கும் பெரிய பலாப்பழம்போல, காதல் வியப்பட்டு நிற்கும் இவ ளது காதல் மிகப்பெரியது, ஆனால் அதை தாங்கும் அளவுக்கு அவள் உயிர் பெரியதாகத் தெரியவில்லை. அது மிகச்சிறியது.

இந்த வேதனையினையும் விரக தாபத்தையும் யார் தான் அறிவார்களோ! வேர்ப்பாலாக்களுக்கு மூங்கில் வேலியிட்டு பாதுகாக்கும் மலைநாட்டின் தலைவனே!! என விழிக்கின்றது.

அடுத்து இது கொஞ்சம் படு செக்ஸியான செய்யுள் தான். அப்படியே பொருளை சொல்லிவிடமுடியாது. பட் டும்படாமலும்தான் சொல்லவேண்டும் கடைசிவரி பொருளை அப்படியே கண்டுபிடிப்பவர்களுக்கு முழுவதும் விளங்கும். வேண்டுமென்றால் முயன்றுபாருங்களேன். இது ஒரு பெண்ணின் உச்சக்கட்ட விரகாத உணர்வு. நீண்டநாள் பிரிவின் ஏக்கம். பாலைநிலத்து பெண் ஒரு வள் விரகதாப உச்சத்தில் பிதற்றுவதாக கொல்லன் அழிசி என்ற புலவனின் செய்யுள்.

**கன்றும் உண்ணாது கலத்தினுள் படாது**
**நல் ஆன் தீம் பால் நிலத்தில் உக்கா அங்கு**
**எனக்கு அகாது என்னைக்கும் உதவாது**
**பசலை உணீஇயர் வேண்டும்**
**திதலை அல்குல் என் மாமைக் கவினே**

கன்றும் குடிக்காமல், பாத்திரத்திலும் கறக்காமல், நிலத்தில் வீணே வழிந்துபோகும் பசுவின் பாலைப் போல, எனக்கும் உதவாமல், என் தலைவனுக்கும் இல்லாமல் என் அழகும் வீணாகிக்கொண்டிருக்கின்றதே (இப்படித்தான் கொஞ்சம் மறைச்சு பொருள் விளக்கம் தரமுடியும்) ஒரு பெண்ணுக்கு காதல் வந்துவிட்டால் முதலில் கெடுவதென்ன தூக்கம்தானே? அப்படி காதல் வயப்பட்ட பெண்கள், தாங்கள் தூங்காது அடிச்சுப் போட் டதுபோல தூங்கும் ஊரைப்பார்த்து பொறாமைப்படு வதும், ஆத்திரப்படுவதும் கொஞ்சம் ஓவர்தான். நெய்தல் நிலப்பெண் காதல் வயப்பட்டு தூக்கம் தொலைத்து நின்ற உணர்வை பதுமனார் என்ற புலர் சொல்கின்றார் இப்படி

**நள்ளென்றன்றே, யாமம் சொல் அவித்து**
**இனிது அடங்கினரே, மாக்கள் முனிவு இன்று,**
**நனந்தலை உலகமும் துஞ்சும்**
**ஓர் யான் மற்ற துஞ்சாதேனே**

நள்ளிரவு நிசப்தம் நலவுகின்றதே.. தமது சத்தங்களை எல்லாம் தொலைத்து மக்கள் தூங்குகின்றனரே, அடடா உலகமே தூங்குகின்றதே என்னைத்தவிர! (மக்களும் உலகமுமா சொன்னார்கள் இவளை காதல் செய்யச் சொல்லி?) அடடா கால் என்று சொன்னால் அது பெண் ணுக்குத்தானா? ஆண் காதல் தாபத்தில் தவிக்கமாட் டானா? என்று எண்ணுகின்றோம் அல்லவா? ஆணுக்கு நாணம் வந்தால் அதைவிட அவஸ்தை வேறு இல்லை என்பதை சரியாக்குவதுபோல குறிஞ்சி நிலத்து தலை வன் ஒருவன் வெட்கப்படுகின்றான் ஏன் என்று புலவர் தொல்கபிலர் சொல்கின்றார் இப்படி

**அமிழ்து பொதி செந் நா அஞ்ச வந்த**
**வார்த்து இலக்கு வை எயிற்றுச் சில் மொழி அரிவையைப்**
**பெறுகதில் அம்ம யானே பெற்றாங்கு**
**அறிகதில் அம்ம இவ் ஊரே மறுகில்,**
**நல்லோள் கணவன் இவன் எனப்**
**பல்லோர் கூற, யா அம் நாணுகம் சிறிதே**

நன்றாக சிவந்துபோன நாக்கு, அணிசேர்ந்ததுபோல அழகான சிறிய பற்கள், குறைவான பேச்சு உள்ள இந் தப் பெண்ணை தான் அடைந்தபோது, அந்த ஊரே தன்னை இந்த நல்லவன்தான் இவளின் கணவன் என்று சொல்லும்போது தான் கொஞ்சம் வெக்கப்படுவாராம் இவர். (அப்பவே வடிவேலுவின் காமடிகள் ரிலீஸ் ஆகிட்டோ) காதலிச்சா கண்ணின் நிறம்மாறுமா? மாறும்தான் என்கின்றனர் அனுபவ சாலிகள். ஒருவகை யில் நித்திரை இன்றி கண் நிறம்மாறும், அழுது அழுது கண்ணின் நிறம் மாறும், துரத்திக்கொண்டு வெயிலில் திரிந்தால் கண்ணின் நிறம் மாறும், அடி வாங்கிக்கூட கண்ணின் நிறம்மாறும். அட போங்க ஆளே மாறும் போது கண்ணின் நிறம் மாறாத என்ன? குறிஞ்சி நிலத் தைச்சேந்த தலைவி ஒருத்தி காதலித்து தன் கண்களின் நிறம்மாறியது என்பதுபோல எழுதியுள்ளார் புலவர் கபி லர்.

**மாசு அறக் கழீஇய யானை போலப்**
**பெரும் பெயல் உழந்த இரும் பிணர் துறுகல்**
**பைதல் ஒரு தலைச்சேக்கும் நாடன்**
**நோய் தந்தனனே தோழி பசலை ஆர்ந்தன,**
**நம் குவளை அம் கண்ணே**

அழுக்குப்போக சுத்தமாக கழுவப்பட்ட யானையி னைப்போலவும், பெரும் மழையினால் நிலமெல்லாம் கழுவப்பட்டு சுத்தமான நாட்டைச்சேர்ந்தவன் எனக்கு தந்த காதல் நோயால் கறுப்பான என் கண்கள் இப்போ பச்சையாக போய்விட்டது என்கின்றாள். மஞ்சளாய்ப் போயிருந்தாலாவது மஞ்சள் காமாலை என்று மருந் தெடுத்திருக்கலாம். பசுமைக்கு ஏங்கியதாலோ என்னமோ இவளது கண்கள் பச்சையாகிவிட்டனவோ தெரியாது. இப்படியே விரக தபாங்கள், பொய்க்கோபங்கள், நாணங் கள், கூடலின் பின் ஊடல்கள், பழியை காதலி மீதும், காதலன்மீதும் மாறி மாறி போடும் தன்மைகள், தங்கள் காதலை உலகமே கவனிக்கவேண்டும், அதுவே மிகப் பெரிய விடயம் என்ற எண்ணங்கள், விரகதாபத்தின் உச்சத்தில் வரும் சுய கோபங்கள் என்று காதலர்களின் பல்வேறு உணர்வுகளையும் சங்க இலக்கிய காதல்கள் தொட்டு நிற்கின்றன. எத்தனையோ அற்புதமான செய் யுள்கள்! தமிழ் பக்தி மொழி என்பது தவறு. தமிழ் உணர் வுகளின் மொழி என்று சொல்லுங்கள். தமிழுக்கு உருகி உருகி கும்பிடவும் தெரிந்திருக்கின்றது. அதைவிட உருகி உருகி காதலிக்கவும் தெரிந்துள்ளது.

## பறத்தலை இயல்பாக்காத பறவை

**குறி தவறிய இலக்கிலிருந்து**
**விரிகின்றன கற்பனைகள்**
**பின்பு அந்த பறவை என்னவாயிருக்கும்?**
**கூடடையும் பரபரப்பில் நீந்தியிருக்கும்**
**இன்னோர் அலட்சியத்துடன்**
**பழத்தோட்டத்திற்கு நடந்திருக்கும்**
**பறத்தலை மறுப்பதற்கான காரணங்களை**
**பட்சியின் தருணங்களென**
**வரைகிறான் மகன்**
**கீலங்களாக்கப்பட்ட வரைதாளில்**
**கோடுகளின் பின்னே**
**அமர்ந்திருக்கிறது பறவை**
**மகன் விளையாடப்போன**
**மணித்துளியில் பறத்தலை**
**நினைவூட்டினேன்**
**பறத்தலுக்கு அப்பாலான**
**தருணங்களிலேயே அலைவுறுகிறது அது**
**கீலங்களை சிறைகளென உணர்ந்த**
**தருணத்தில் மீண்டும் பறந்து விடுகிறது**
**மீந்து கிடக்கிறது**
**பறத்தலை சொல்லாக்கி**
**பிறகு கல்லாக்கி நான்**
**எறியாதிருந்த ஒரு கல்**

- லலித்தா -

## கனவுக் கதிர்



# என்ன மலர் நீ சொல்லு...!

நல்லவரின் மனசு போல
வெள்ளை மலர் நானே - எந்தன்
நறுமணத்தை விஞ்சியெழ
மலர்களேதும் உண்டோ ?

கொடியி னிலே நான்மலர்வேன்
கொத்துக் கொத்தாக - பெண்கள்
கூந்தலிலே நான் தவழ்வேன்
அழகுச் சரமாக

சின்னச் சின்ன மலராக
நானி ருந்த போதும் - என்னை
அள்ளி அள்ளி முகராத
மனிதர் களும் உண்டோ

என்னைச் சுற்றி வண்டுகளும்
ரீங்காரம் பாடி
இனிமையான தேனையுண்டு
களி நடனம் புரியும்

அழகழகாய் எ(ன்)னைப் புகழும்
பாடல்களோ நூறு
இருந்த போதும் வீண்பெருமை
கொண்டதில்லை நானும்

என்னி தழ்கள் வெண்மையாக
இருப்பதனைப் போல - என்
இதயம் கூட வெள்ளையடி
சின்னஞ் சிறு பெண்ணே

இப்பொழுது சொல்லு பெண்ணே
என் பெயரை நீயும் - நீ
எடுத்துச் சொன்னால் உன்கழுத்தில்
மாலையாக விழுவேன்

அழகோடு நறிய மணம்
கொண்டு மாலை வேளை - நீ
இதழ்வி ரிக்கும் மல்லிகையாம்
இனிய மலர் தானே..?

ஷெல்லிதாசன்





# கல்விக்கதிர்

- அகரன் -

# உலகில் உள்ள மிகவும் உயரமான நீர்வீழ்ச்சிகள்

உலகிலேயே மிக உயரமான நீர் வீழ்ச்சி ஏஞ்சல் நீர்வீழ்ச்சி (Angel Falls) ஆகும். இதுவே உலகில் மிக உயரமான இடத்திலிருந்து எந்தத் தடையும் இன்றி விழுகின்ற நீர்வீழ்ச்சியாகும்.

இது தென்னமெரிக்க கண்டத்திலுள்ள வெனிசுலா நாட்டின் கனைமா தேசியப் பூங்காவில் அமைந்துள்ளது.

இது அவென்டியூய் (Auyantepui) என்னும் மலையின் 979 மீற்றர் உயர முகட்டிலிருந்து செங்குத்தாக விழுகிறது.

அதாவது 3,212 அடி உயரம். இது 807 மீற்றர் (2,648 அடி) எந்த தடையும் இன்றி விழுகிறது. இதன் ஒரு துளி நீர் தரையை அடைய 14 நிமிடங்கள் எடுக்கின்றன. நீர் வீழ்ச்சியிலிருந்து விழும் நீரானது தரையை அடையும் முன்னதாக அங்கு வீசும் காற்றினால், பெருமளவில் பனித்துளிகள்போல் ஆவியாக பறக்கின்றன.

எஞ்சியவையே கெரெப் என்னும் ஆற்றில் விழுகின்றன. அந்த ஆறு சுருண் ஆற்றில் கலக்கிறது. இந்த நீர்வீழ்ச்சி 20 ஆம் நூற்றாண்டிலே வெளி உலகிற்கு தெரியவந்தது.

1933ஆம் ஆண்டு அமெரிக்க விமானி ஜிம்மி ஏஞ்சல் என்பவர் தங்கத்தைத் தேடி மலைகளின்மேல் பறந்து சென்றபோது நீர் வீழ்ச்சியைக் கண்டார். அதன் பிறகே வெளி உலகிற்குத் தெரிய வந்தது. அதனால் அதற்கு அவரின் பெயரால் ஏஞ்சல் நீர் வீழ்ச்சி என அழைக்கப்பட்டது.

இந்த நீர்வீழ்ச்சி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வீழ்ந்துகொண்டிருக்கிறது. செவ்விந்தியர்கள் இதனை சுருண் மேரு என்று அழைத்தனர். இது உள்நாட்டு மக்களின் சொத்து. உள்நாட்டு மக்களுக்கு ஏற்கனவே தெரிந்த ஒன்று என்பதால் இந்த நீர்வீழ்ச்சியை கீரிபாகுபாய் வீனா (Kerepakupai Vena) என்ற பெயரில் அழைக்குமாறு வெனிசுலா ஜனாதிபதி ஹீகோ சாவேஸ் 2009 இல் அறிவித்தார். இதற்கு நீர்வீழ்ச்சி மிகவும் ஆழமான இடத்தில் விழுதல் என்பது பொருளாகும்.

இயற்கை சூழலோடு இருக்கும் அழகான நீர்வீழ்ச்சியை பார்க்க மிகவும் சந்தோசமாக இருக்கும். ஏராளமான நீர்வீழ்ச்சிகள் நம்மை சுற்றிலும் இருக்கின்றன. அதில் பல நீர்வீழ்ச்சிகள் மிகவும் உயரமான இடங்களில் இருந்து விழுகின்றன. அப்படி உலகில் உள்ள மிகவும் உயரமான முதல் 10 நீர்வீழ்ச்சிகள் பற்றி இந்த பதிவில் பார்ப்போம்.



### 1. பிரவுனீ நீர்வீழ்ச்சி

பிரவுனீ நீர்வீழ்ச்சி நியூசிலாந்தின் சவுத் லேண்ட் பியார்ட்லேண்ட் தேசிய பூங்காவில் அமைந்துள்ளது. இந்த நீர்வீழ்ச்சி 836 மீற்றர் உயரம் கொண்டது. இங்கு செல்வதற்கு சாலை வசதிகள் இல்லாததால் சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்வது மிகவும் கடினம்.

### 2. ஜேம்ஸ் புரூஸ் நீர்வீழ்ச்சி

ஜேம்ஸ் புரூஸ் நீர்வீழ்ச்சி கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள பிரின்சஸ் லூயிசா இன்லெட் அருகே அமைந்துள்ளது. இதன் உயரம் 840 மீற்றர்கள். இந்த அருவியில் வரும் நீர் பனிப்பாறையிலிருந்து வருவதால் எப்பொழுதும் மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். ஆண்டு முழுவதும் இந்த அருவியில் தண்ணீர் வருவதில்லை. வெப்ப காலங்களில் இந்த அருவி வறண்டுவிடும்.

### 3. புயுகா ஒகு நீர்வீழ்ச்சி



புயுகா ஒகு நீர்வீழ்ச்சி அமெரிக்காவின் ஹவாயில் மேலோகா கடற்கரையில் அமைந்துள்ளது. இது 840 மீற்றர்கள் உயரத்தையும் கொண்டுள்ளது. இந்த அருவியை முழுமையாக பார்க்க படகுகள் அல்லது ஹெலிக்கொப்டர்கள் மூலமாக செல்ல வேண்டும். அங்கு வீசும் காற்று அருவியில் இருந்து விழும் நீரை மூடு பனி திவலைகளாக மாற்றுகின்றது.

### 4. பாலிபோசென் நீர்வீழ்ச்சி



பாலிபோசென் நீர்வீழ்ச்சி நோர்வேயின் ஹோர்டாலாண்ட் கவுண்டியில் அமைந்துள்ளது. இது 850 மீற்றர் உயரம் உள்ளது. இதன் முதன்மை நீர் ஆதாரம் உருகும் பனிமலை. இதனால் நீர்வீழ்ச்சியின் ஓட்ட அளவு மற்றும் தோற்றம் பருவத்தை பொறுத்து மாறுபடும்.

இது கோடையில் கிட்டத்தட்ட வறண்டதாக மாறும். உலகளாவிய வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்தால் இந்த நீர்வீழ்ச்சியில் பாய்ந்து செல்லும் தண்ணீரை உருவாக்கும் பனிக்கட்டிகள் வெகுவாக சுருங்கி அதை வெறும் வறண்டதாக மாற்ற கூடும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அஞ்சுகிறார்கள்.

### 5. வின்னுபோசென் நீர்வீழ்ச்சி

வின்னுபோசென் நீர்வீழ்ச்சி நோர்வேயில் உள்ள மோர் அக் ரொம்ஸ்டல் கவுண்டியின் சுண்டல்சராவில் அமைந்துள்ளது. இது 860 மீற்றர் உயரத்தில் உள்ள மிக உயர்ந்த நீர்வீழ்ச்சியாகும். அதன் முதன்மை நீர் ஆதாரம் வின்னுஃபோனா பனிப்பாறை ஆகும்.

இந்த நீர்வீழ்ச்சி வின்னு நதியின் ஒரு



பகுதியாகும். இது வின்னுப்ஜெல்லெட் மலையிலிருந்து கீழே பாய்கிறது. இந்த நீர்வீழ்ச்சி ஹோல்சாண்ட் கிராமத்திற்கு அருகிலுள்ள டிரிவா நதியில் பாய்கிறது.

### 6. யும்பில்லா நீர்வீழ்ச்சி


யும்பில்லா நீர்வீழ்ச்சி என்பது அமேசானின் வடக்கு பெருவியன் பிராந்தியத்தில் உள்ள கியூஸ்பெஸ் நகருக்கு அருகில் அமைந்துள்ளது. 2007 ஆம் ஆண்டில் பெருவின் புவியியல் நிறுவனம் நடத்திய புவியியல் ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட இந்த நீர்வீழ்ச்சி 896 மீற்றர் உயரம் கொண்டது.

கேவர்னா சான் பிரான்ஸிஸ்கொ என்ற குகையில் இருந்து இந்த நீரோடை வருகிறது. அருகிலேயே பல முக்கிய நிகழ்ச்சிகள் உள்ளன.



### 7. ஓலோ உபெனா நீர்வீழ்ச்சி

இது ஒலூபெனா நீர்வீழ்ச்சி எனவும் அழைக்கப்படுகிறது. அமெரிக்காவின்



ஹவாய் தீவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இது 900 மீற்றர் உயரம் கொண்ட அமெரிக்காவின் மிக உயரமான நீர் வீழ்ச்சியாகும். சுற்றுலா பயணிகள் படகு அல்லது ஹெலிக்கொப்டர் மூலமாக இந்த நீர்வீழ்ச்சியை பார்க்க முடியும்.

### 8. ட்ரெஸ் ஹெர்மனாஸ் நீர்வீழ்ச்சி

ட்ரெஸ் ஹெர்மனாஸ் நீர்வீழ்ச்சி பெருவின் ஜூனினின் ஒடிஷி தேசிய பூங்காவிற்குள் குட்டிவிரேனி ஆற்றின் அருகில் அமைந்துள்ளது. இது 914 மீற்றர் உயரம் கொண்டது. இது மூன்று அடுக்குகளைக் கொண்டுள்ளது.

முதல் இரண்டு அடுக்கு இயற்கையான நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், மூன்றாவது அடுக்கு குட்டிவிரேனி ஆற்றில் விழுகிறது. இதைப்பார்க்க கடினம் காரணம். காரணம் இது வெப்பமண்டல மழைக்காடுகளில் உள்ள மிகப்பெரிய உயரமான மரங்களால் சூழப்பட்டுள்ளது. வானிலிருந்து ஓரளவிற்கு பார்க்கலாம்.

### 09. துகேலா நீர்வீழ்ச்சி

948 மீற்றர் உயரமுள்ள இந்த ஐந்து அடுக்கு துகேலா நீர்வீழ்ச்சி தென் ஆபிரிக்காவின் குவாசுலு நடால் பகுதியில் உள்ள ராயல் நடால் தேசிய பூங்காவில் அமைந்துள்ளது. மழைக்காலத்தில் மட்டுமே நீர்வீழ்ச்சி ஆர்ப்பரித்து கொட்டும்.

ஆண்டின் பிற்பகுதியில் அருவியில் தண்ணீர் விழுவது குறைவாக இருக்கும். இந்த நீர்விழ்ச்சியை நீங்கள் மலையின் உச்சியில் சென்று பார்க்கலாம். அதிக சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் இடம் இது.

வெனிசுலாவின் பொலிவார் மாகாணத்தின் கனாய்மா தேசிய பூங்காவில் உள்ள ஏஞ்சல் நீர்வீழ்ச்சி உலகின் மிக உயரமான நீர்வீழ்ச்சி பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. இதன் உயரம் 979 மீற்றர்கள். 1933 ஆம் ஆண்டில் தற்செயலாக அதை கண்டுபிடித்த அமெரிக்க ஆய்வாளர் ஜிம்மி என்ற பெயர் இதற்கு சூட்டப்பட்டது.

இதன் மேற்குப் பகுதி பெரும்பாலும் மேகங்கள் மற்றும் மூடு பனியால் மூடப்பட்டிருக்கும். இது கராவ் ஆற்றின் துணை நதியான சுருன் ஆற்றில் பாய்கிறது. இது ஓரினோகா ஆற்றின் துணை நதியாகும்.

# நேர்காணல்

## Yuva Beauty Saloon அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் பொன்னம்பலம் யுவபிரசாந்தினி உடனான நேர்காணல்



நேர்கண்டவர் - திருமலை தட்சா

### "சிறந்த அழகுக்கலை நிலையமாக எனது அழகுக்கலை நிலையம் பேசப்பட வேண்டும்"

**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

எனது பெயர் பொன்னம்பலம் யுவபிரசாந்தினி. அழகுக்கலைத் துறையில் ஏற்பட்ட ஆர்வத்தின் நிமித்தம் 2016இல் முறையாகப் பயின்று என்னை முழுமையாக தயாா்ப்படுத்திக் கொண்டு, விடாமுயற்சியின் மூலம் 2020ஆம் ஆண்டு தொடக்கம் **Yuva Beauty Saloon** என்ற பெயரில் அழகுக்கலை நிலையத்தை இன்று வரை நடாத்தி வருகின்றேன்.

**02) அழகுக்கலைத் துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம் பற்றி?**

எனக்கு 10வயது இருக்கும் போது குடும்ப நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தேன். அத்தருணத்தில், அன்றைய நிகழ்வின் பெண்ணிற்கு **Blossum Beauty Care** உரிமையாளர் மைதிலி சகோதரியினால் செய்யப்பட்ட ஒப்பனை அலங்காரம் மிகவும் மெருகூட்டப்பட்டதாக இருந்ததோடு என்னையும் மிகக் கவர்ந்தது. அன்றிலிருந்து மைதிலி சகோதரியை முன்மாதிரியாகக் கொண்டு நானும் இத்துறையினை முறையாகக் கற்று பயிற்சி பெற்று சிறந்த அழகுக்கலை நிபுணராக தடம்பதிக்க வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது.



**03) உங்களது அழகுக் கலை நிலையம் பற்றியும், அதன் சேவைகள் பற்றியும்?**

**Yuva Beauty Saloon** ஆனது வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கமைய என்னுடைய திறமையை வெளிப்படுத்தும் நோக்கில் சிறியவர்கள் தொடக்கம் பெரியோர்கள் வரை சேவையினை முன்னெடுத்து வருகின்றேன்.

**04) இத் துறையில் நீங்கள் முகங்கொடுக்கும் சவால்கள் பற்றி?**

ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ற வகையில் அழகுக்கலையில் புதுவிதமான மாற்றங்கள் கொண்டு வரப்பட்டு வருகின்றன. அதன் பொருட்டு என்னை நான் தயாா்ப்படுத்திக் கொள்வதும், புதுவிதமான ஒப்பனை செயற்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்வதும் சவால்களாக காணப்படுகின்றன.

**05) இத்துறையில் நீங்கள் அடைந்த சாதனைகள் பற்றி?**

சாதனைகளாக கருதப்படுவது விருதுகள் என்பதனையும் தாண்டி 2016ஆம் ஆண்டிலிருந்து 7வருடங்களாக குடும்பச் சூழ்நிலைகளைத் தாண்டியும் பல இன்னல்களை எதிர் கொண்டும் இத்துறையில் சவால்களைத் தாண்டி வெற்றிகளை எதிர்கொள்வதே எனது சாதனைகளாகக் கருதுகின்றேன்.

**06) இன்று பல பெண்கள் சருமப் பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அது குறித்தும், அதற்கான தீர்வுகள் பற்றியும்?**

இன்று பல பெண்களும் சருமப் பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அப்பிரச்சினை எதனால், எதற்கு என்பதை முதலில் கண்டறிவது மிக முக்கியமான விடயமாகும். அடுத்து ஒவ்வொருவரினது சர்மமும் வெவ்வேறு வகைப்படும். அதன் வகையும் எது என்பதை தெரிந்து கொண்டு அழகுக்கலை நிபுணரிடம் முறைப்படி சரியான முறையில் ஆலோசனைப் பெற்று, அதிகப்படியான இரசாயனத் தன்மை மிகுந்த தயாரிப்புகளை தவிர்த்து தங்களது சர்மத்தினை ஆரோக்கியத்துடன், அழகான முறையில் பராமரிக்க முடியும்.

**07) அழகுத்துறை தவிர வேறு துறைகளில் உங்களது நாட்டம் பற்றி?**

எனது அழகுக்கலை நிலையத்தில் ஓய்வாக இருக்கும் நேரங்களில் **aari embroidery** பயிற்சியினை மேற்கொண்டு வருகின்றேன்.

**08) திருகோணமலை மாவட்டத்தில் அழகுக்கலைத் துறை மீதான பார்வை எவ்வாறு உள்ளது?**

திருகோணமலை மாவட்டத்தில் தற்சமயம் இத்துறை மீதான பார்வை அதிகளவான போட்டிகள் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. காரணம் இன்றைய நாகரிக வளர்ச்சியில் பலரும் இத்துறையினை விரும்பிக் கற்று சேவையினை முன்னெடுத்து வருவதேயாகும்.

**09) இத்துறையில் உங்களது இலக்கு எதுவாக வுள்ளது?**

வளர்ந்து வரும் இளைய சமுதாயத்தின் மத்தியில் சிறந்த அழகுக்கலை நிலையமாக எனது அழகுக்கலை நிலையம் பேசப்பட வேண்டுமென்ற இலக்கை நோக்கிச் செல்கிறேன்.

**10) இத்துறை மூலமாக உங்களுக்கு கிடைக்கும் வருமானம் திருப்தியளிக்கின்றதா?**

நிறைவான திருப்தி இல்லாவிடினும் இன்றைய வாழ்வாதாரத்திற்கு போதுமானதாகவுள்ளது.

**11) நிறைவாக, சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு கூற விரும்புவது?**

**focus on your goals** - உங்கள் இலக்குகளில் கவனம் செலுத்துங்கள். இவ் உலகத்தில் மிக மதிப்பான ஒன்று உங்களுடைய இலக்கு. உங்களின் இலக்கு எதுவென்று அறிந்து அதை நோக்கி பயணியுங்கள். எமது வாழ்க்கையில் சமூகத்தைப் பார்த்து அஞ்சத் தேவையில்லை. எம்மிடம் இருக்கும் திறமையினை இவ் உலகத்தில் வெளிக்காட்டுவதற்கான வாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்காக போராட வேண்டும். விடாமுயற்சியில் ஈடுபட வேண்டும். எம் திறமைகளை வெளிக்காட்டுவதற்கான இந்த வாழ்க்கை ஒரு அற்புதமான வாய்ப்பு. பெண்களாகிய நாம் ஒவ்வொருவரும் சாதிப்பதற்காகவே பிறந்தவர்கள். அதனை நீங்களே நிரூபியுங்கள்.

# ஆட்டிறைச்சி நன்மைகள்



அசைவ உணவான ஆட்டிறைச்சியானது, நமது உடம்பில் இருக்கும் ஒவ்வொரு உடல் பாகத்திற்கும் ஆரோக்கிய நன்மை தருகிறது.

இதில், பல்வேறு மருத்துவ பலன்களும் உள்ளன . எனவே ஆட்டு இறைச்சி சாப்பிடும் போது, சதை இறைச்சியை மட்டும் சாப்பிடுவதை தவிர்த்து விட்டு அதனுடைய உறுப்பு இறைச்சியையும் சேர்த்து சாப்பிட வேண்டும். அதேபோல், மது அருந்தி விட்டு, ஆட்டிறைச்சி சாப்பிடுவதை முற்றிலும் தவிர்ப்பது மிகவும் நல்லது.

ஆட்டின் மூளையானது, தாது விருத்தியை ஏற்படுத்துகிறது. மேலும் கண்ணுக்கு குளிர்ச்சி, அதிக நினைவாற்றல், வலிமையான மூளை போன்ற நன்மைகளுக்கு ஆட்டின் மூளை பயன்படுகிறது.

ஆட்டின் மூளைப் பகுதியை உணவில் சேர்த்துக் கொண்டால் கபத்தை நீக்கி, மார்புப் பகுதியில் இருக்கும் புண்களை குணப்படுத்தி, மார்பக பகுதியை வலிமை அடையச் செய்கிறது.

ஆட்டின் இதயத்தை சமைத்து சாப்பிட்டு வந்தால், நமது இதயத்திற்கு நல்ல பலம் கிடைக்கும். மேலும் நமது மன ஆற்றல் அதிகரிப்பதற்கு நல்ல பலனைத் தருகின்றது.

ஆட்டின் நுரையீரல் மற்றும் கொழுப்புகள் நமது உடலின் வெப்பத்தை குறைத்துக் குளிர்ச்சியை ஏற்படுத்துவதுடன், நுரையீரல் மற்றும் இடுப்புப் பகுதிக்கு நல்ல வலிமையைத் தருகிறது.

ஆட்டு இறைச்சியானது, நமது சிறுநீரக சுரப்பியை வலிமை அடையச் செய்து, ஆண் குறியின் வலிமையை மேம்படுத்துகிறது.

ஆட்டிறைச்சி, நமது உடல் சூட்டை தணித்து, தோலுக்கு வலிமை அடையச்செய்து, சருமம் பளபளக்க நல்ல தீர்வாக உள்ளது.

ஆட்டின் தலை இறைச்சியை சாப்பிடுவதால், நம்முடைய இதயம் சார்ந்த வலி மற்றும் கோளாறுகளை நீக்கி, குடல் மற்றும் நமது தலைப் பகுதியில் இருக்கும் எலும்பினை வலுப்படுத்துகிறது.

ஆட்டு இறைச்சியில், அதனுடைய கால்களை சூப் வைத்து குடித்து வந்தால், நம்முடைய எலும்புகள் மற்றும் கால்கள் நல்ல ஆற்றலை பெறுகிறது.

ஆட்டிறைச்சியை வாரம் ஒரு முறை உணவில் சேர்த்து சாப்பிட்டு வந்தால், நம்முடைய பார்வை கோளாறுகள் சரியாகி, கூர்மையான பார்வை மற்றும் நமது கண்களுக்கு மிகுந்த வலிமை கிடைக்கிறது.



# ஆட்டிறைச்சி குழம்பு

## தேவையான பொருள்கள்



இறைச்சி - 1/2 கிலோ
சின்ன வெங்காயம் - 2 1/2 கப்
செத்தல் மிளகாய் - 7
சோம்பு - 1 கரண்டி
மல்லி - 2 கரண்டி
சீரகம் - 1 கரண்டி
கசகசா - 1/4 கரண்டி
பட்டை - 1 துண்டு
பூண்டு - 6 பல்
இஞ்சி - 1 சிறிய துண்டு
எண்ணெய் - 3 கரண்டி

## செய்முறை

மசாலா தயாரிப்பதற்கு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி சூடானதும், சின்ன வெங்காயத்தைப் போட்டு 5 நிமிடம் வதக்க வேண்டும். பின் அதில் பூண்டு சேர்த்து 2 நிமிடம் வதக்கி, சோம்பு, மல்லி விதைகள், சீரகம், கசகசா, பட்டை, மிளகாய் சேர்த்து 3 நிமிடம் வதக்க வேண்டும். பின்பு அதில் வேண்டுமனால் இஞ்சியை சேர்த்து சில நிமிடங்கள் குறைவான தீயில் வதக்கி இறக்கி குளிர வைக்க வேண்டும். அடுத்து வதக்கிய பொருள்களை போட்டு, நீர் சேர்க்காமல் நன்கு மென்மையாக அரைத்து தனியாகக் கொள்ள வேண்டும்.

பின்னர் ஒரு கனமான வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி சூடானதும், கடுகு சேர்த்து தாளித்து, நறுக்கிய பெரிய வெங்காயத்தைப் போட்டு சிறிது நேரம் வதக்கி, இஞ்சி பூண்டு விழுது சேர்த்து நன்கு வதக்க வேண்டும். பிறகு அதில் பச்சை மிளகாய் மற்றும் கறிவேப்பிலை சேர்த்து ஒரு நிமிடம் வதக்க வேண்டும். பின் கழுவிய இறைச்சியை சேர்த்து உப்பு தூவி, இறைச்சி நிறம் மாறி பெரிதாகும் வரை நன்கு வதக்க வேண்டும்.

அடுத்து அதில் அரைத்து வைத்துள்ள சிவப்பு மசாலா விழுதை சேர்த்து 5 நிமிடம் நன்கு வதக்கி விட வேண்டும். அதன்பின் அதில் இறைச்சி மூழ்கும் வரையான தண்ணீர் ஊற்றி, வாணலியை மூடி வைத்து 1/2 மணிநேரம் நன்கு வேக வைக்க வேண்டும்.

(அவ்வப்போது மூடியைத் திறந்து இறைச்சியில் நீர் உள்ளதாக என்பதை பார்த்துக் கொள்ள மறக்க வேண்டாம்) மட்டன் நன்கு வெந்ததும், அதில் அரைத்து வைத்துள்ள மசாலா மற்றும் தேங்காய் துண்டுகளை சேர்த்து, சுவைக்கேற்ப உப்பும் சேர்த்து கிளறி, நன்கு பச்சை வாசனை போக கொதிக்க வைத்து இறக்கினால், சுவையான கறி தயார்.

# சிக்கன் பிரட்டல்

இந்த வார விடுமுறை நாளில் ஒரு சுவையான மற்றும் வித்தியாசமான உணவை முயற்சிக்க விரும்புகிறீர்களா? இந்த வாரம் நீங்கள் சிக்கன் எடுக்க திட்டமிட்டுள்ளீர்களா? அப்படியானால் சிக்கன் பிரட்டல் செய்யுங்கள். இந்த சிக்கன் பிரட்டல் அற்புதமாக இருக்கும். குறிப்பாக இந்த சிக்கன் பிரட்டல் செய்வதற்கும் இலகுவாக இருக்கும்.

## தேவையான பொருள்கள்



தேங்காய் எண்ணெய் - 1/4 கப்
சின்ன வெங்காயம் - 10 - 15
துருவிய தேங்காய் - 1/4 கப்
கரம் மசாலா - 1 கரண்டி
எலுமிச்சை சாறு - சுவைக்கேற்ப
சிக்கன் - 500 கிராம்
இஞ்சி - 1 கரண்டி (பொடியாக நறுக்கியது)
பூண்டு - 2 கரண்டி (பொடியாக நறுக்கியது)
வெங்காயம் - 1 (பொடியாக நறுக்கியது)
கறிவேப்பிலை - சிறிது
தயிர் - 1/4 கப்
உப்பு - சுவைக்கேற்ப
மிளகாய் தூள் - 3கரண்டி
மஞ்சள் தூள் - 1/2 கரண்டி
மல்லித் தூள் - 1 கரண்டி

## செய்முறை

முதலில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் மிளகாய்த்தூள், மல்லித் தூள், மஞ்சள் தூள் ஆகியவற்றை சேர்த்து 2 நிமிடம் நன்கு வறுத்து இறக்கி தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர் வெங்காயம், வறுத்த மசாலா பொடி, உப்பு சேர்த்து கிளறி, பின் அதில் கறிவேப்பிலை, இஞ்சி, பூண்டு மற்றும் சிக்கனை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பின்பு அதில் தயிரை சேர்த்து நன்கு கிளறி 30 நிமிடம் ஊற வைக்க வேண்டும்.

பிறகு ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் ஊற வைத்துள்ள சிக்கன் துண்டுகளை சேர்த்து கிளறி, மூடி வைத்து சிக்கனை நன்கு வேக வைக்க வேண்டும்.

சிக்கனில் இருந்து நீர் வெளிவர ஆரம்பிக்கும் போது, எண்ணெய் ஊற்றி கிளறி, சின்ன வெங்காயத்தை சேர்த்து நன்கு கிளறி விட வேண்டும்.

சிக்கன் நன்கு பொன்னிறமாக வெந்ததும், அதில் தேங்காய், கரம் மசாலா சேர்த்து நன்கு கிளறி விட வேண்டும்.

இறுதியாக எலுமிச்சை சாற்றினை சேர்த்து கிளறினால், சிக்கன் பிரட்டல் தயார்.



# திருவாதவூரரைச் சிந்தையில் இருத்துவோம்!

## இன்று அவரின் குருபூசைத் தினம்

— மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா —
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர் மெல்பேண், ஆஸ்திரேலியா)


மாணிக்கவாசகர்

தேனை நாடி வண்டுகள் ஓடும்.தேனைச் சுவைப் பதில் வண்டுகளுக்கு பேரானந்தம். இந்த வண்டு மற்றைய வண்டுகள் போன்றதன்று. இவ்வண்டு திருவாதவூரில் இருந்து வந்த வண்டு. ஏனைய வண்டுகள் பல மலர்களையும் நாடிநிற்க - வாதவூர் வண்டு மட்டும் வேத உபநிடதங்களை நாடி அங்கு திருவாசகம் என்னும் உயரிய தேனைப் பருகி எமக்கெல்லாம் வழங்கி இருக்கிறது. அந்த வண்டு வழங்கிய தேனான திருவாசகம் – தொட்டாலும் இனிக்கும். கேட்டாலும் இனிக்கும். படித்தாலும் இனிக்கும்.சொல்லச் சொல்ல இனிக்கும் சொற்களால் ஆனதுதான் அந்த வாசகம் 'திருவாசகம்'. இதனால்த்தான் 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்' என்று பலரும் வியந்து போற்றும் நிலை அமைந்து விட்டது.

திருவாதவூரில் பிறந்தபடியால் திருவாதவூரர் என்றும், மணிமணியான வார்த்தைகளை வழங்கியதால் மணிவாசகர் என்றும், அவரின் ஒவ்வொரு வார்த்தையும் சைவத்துக்கும், தமிழுக்கும் மாணிக்கமாய் அமைந்தமையால் மாணிக்கவாசகர் என்றும் யாவராலும் பெருமதிப்புடன் அழைக்கப்பட்டர்.

அந்தணகுலத்தில் பிறந்து, பேராளுமை மிக்கவராய் விளங்கினார் மணிவாசகப் பெருமான் என்று அவரைப்பற்றி திருவாதவூரடிகள் புராணம் வாயிலாக அறிகின்றோம். மணிவாசகப் பெருமானின் ஆளுமையை அவர் வாழ்ந்த பாண்டி நாட்டின் அரசன் - அரிமர்த்தன பாண்டியன் - அகத்தில் இருத்தி, அவரைதனது அரசாட்சியில் முதலமைச்சர் ஆக்கினான். அத்துடன் அவரின் ஆற்றல்களை மெச்சி 'தென்னவன் பிரம்மராயன்' என்னும் பட்டத்தையும் வழங்கிப் பெருமைப்படுத்தினான். மன்னவன் இவ்வாறு பெருமைப்படுத்தினான் என்பதை -

**தென்னவன் பிரமராயன் என்றருள் சிறந்த நாமம்
மன்னவர் மதிக்க நல்கி வையகம் உய்வதாக
மின்னவ மணிப்பூணாடை வெண்மதிக்கவிகை தண்டு
மொன்னவர் கவிரி வேழமளித்தனன் பொருநை நாடன்**

- வாதவூராரினை தனது அகத்தில் ஏற்றிய மன்னவன் - மற்ற மன்னவர்களும் மதிக்கும் வண்ணம், அவருக்கு நன்மதிப்பை கொடுத்தான், நவரத்தினாலான ஆபரணங்கள், பட்டுப்பீதா பரங்கள், சந்திரன் போன்ற வெண் கொற்றக் குடை, முத்திலான சிவிகை, பொன்னாலான காப்பு, சாமரை, யானை என்று அளித்து ஆனந்தம் அடைந்தான் என்று வாதவூரடிகள் புராணம் சுட்டிக் காட்டி நிற்கிறது.

அதிகாரம் மிக்க பதவி. அரசனின் அன்பும் ஆதரவு மான நிலை. எதையும் செய்யும் இருப்பிடம் - இவை எவற்றையுக் வாதவூரரின் உள்ளம் பெரிதாக ஏற்றுக் கொண்டதாகவே தெரியவில்லை. புகழும், ஆடம்பரங்களும் நிலையாய் இருக்க மாட்டா என்னும் நினைப்பால் நிலையாயிருக்கும் அப்பரம்பொருளையே அவர் நாளும் பொழுது எண்ணியபடி அமைச்சர் என்னும் பெயரில் பாண்டியன் அவையில் இருந்தார் எனலாம். 'ஓடும் செம்பொன்னும் ஒக்க நோக்கும் எண்ணமே அவருள்ளத்தில் ஆழமாய், ஆணிவேராய் இருந்தது.

திரும்பெருந்துறையில் நல்ல அரேபியக் குதிரைகள் வந்திருக்கின்றன எனவும், அதனைப் பார்த்து வாங்கி வரும்படியும் திரவியங்களை அரசன் அமைச்சரான வாதவூரரிடம் கொடுக்கிறான். அமைச்சரான வாதவூரரும் குதிரைகளை வாங்குவதற்கு செல்கிறார். அங்கு அவர் குருந்தமர நிழலில் ஓர் ஆனந்தப் பேரொளியைக் காணுகிறார். தன்னை மறக்கிறார். தான் வந்த பணியை மறக்கிறார். அந்த ஞான ஒளியுடை மகானின் திருவடியில் சங்கமம் ஆகிறார்.

குதிரை வாங்கச் சென்ற அமைச்சர் நீண்டநாள் வராதபடியால் அரசன் தூதுவர்களை அனுப்பி நிலைமையினைப் பார்த்துவருமாறு பணிக்கிறான். சென்ற தூதுவர்கள் வாதவூரரின் நிலையை மன்னனிடம் தெரிவிக்கவே மன்னவன் அடங்காச் சினங்கொள்ளுகிறான். சினத்தால் வாதவூரரை வதைக்கிறான். உலகினை மறந்த வாதவூரார் அந்தப் பரம்பொருளிடம் அடைக்கலமாகிறார்.

ஆண்டவனின் ஆணைப்படி – 'ஆவணி மூலத்தில் ஏற்கனவே ஒழுங்கு செய்த குதிரைகள் வரும்' என்று அரசனால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற வாதவூரர் மொழிகின்றார். குதிரைகளும் குறிப்பிட்ட நாளில் வருகின்றன. அரசன் வாதவூரரிடம் மன்னிப்புக் கேட்கின்றான். ஆனால் வந்த குதிரைகள் அனைத்துமே அன்றிரவு நரிகளாய் மாறிவிட்டன. அரசன் ஆத்திரம் மேலோங்குகிறது. வாதவூரரை சிறையில் அடைக்கின்றான். உயரிய பதவியைக் கொடுத்த அரசனே அவரை திரவியங்களை அபகரித்த குற்றவாளியாக்குகிறான். வாதவூரர் துன்பம் படைத்தவனுக்குப் பொறுக்கவில்லை. வைகை ஆறு பெருக்கெடுக்கிறது. அரசன் திகைக்கிறான். பெருகிவரும் நீரைத்தடுக்க நாட்டுமக்களுக்கு அரசன் ஆணையிடுகிறான்.

பலரும் தமக்கான பங்கினை செய்கிறார்கள். ஆனால் பிட்டுவித்துப் பிழைப்பு நடத்தும் செம்மனச் செல்வி என்னும் மூதாட்டிக்கு உதவிட யாருமே இல்லாதிருந்தது. அவ்வேளை எம்பெருமானே வேலையாளாய் வருகிறார். ஒழுங்காய் வேலை பார்க்காத காரணத்தால் அரசனின் காவலர்கள் பிரம்படிக்கு ஆளாகிறார் ஆதி அந்தமில்லா அந்த அரும்பொரும் ஜோதி!

பரம்பொருளின் முதுகில் விழுந்த அடி அரசனின் முதுகில் விழுந்தது. அனைவரின் முதுகிலும் விழுந்தது. அரசன் விழித்தான். அஞ்ஞானம் அகன்றது. வாதவூரரை விடுவித்து விழுந்து விழுந்து வணங்கினான். வாதவூரர் வரலாற்றில் இவற்றைக் காணுகிறோம்.

**கல்லால் ஒருவன் அடிக்க உடல் சிலிர்க்க
காலில் செருப்பால் ஒரு வேடன் வந்தே உதைக்க
வில்லால் ஒருவன் அடிக்க
வீசி மதுரை மாறன் பிரம்பால் அடிக்க ....
அந்த வேளை யாரை நினைத்தீரோ ... அய்யா
பெற்ற தந்தை தாய் இருந்தால் உலகத்தில் உமக்கிந்த
தாழ்வெல்லாம் வருமே அய்யா**

- என்று ஓர் இறையன்பர் பாடுவதில் பிரம்படி பட்ட செய்தி எப்படி வருகிறது பாருங்கள்.

மனிதன் தெய்வத்தோடு வைக்கின்ற இணக்கமானது எப்படியாய் இருப்பினும் அது நல்லதையே நல்கும். அடியுண்ட அரசனுக்கு நல்லறிவு பிறந்தது. வாதவூரருக்கு பலவகையில் உதவிட அரசன் முன்வந்தான். ஆனால் வாதவூரரோ தாம் துறவறத்தையே நாடுவதாகக் கூறினார். அரசனும் வாதவூரர் வழியினைப் பெருவழியென ஏற்றுக் கொண்டான்.

மனிதன் என்பவன் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்கும் பொழுது அத்துறைக்கு ராஜன் ஆகிறான். பாண்டிய மன்னன் அவையில் அமைச்சர் ஆனதால் வாதவூரர் புவிராஜனாகிறார். தித்திக்கும் திருவாசகத்தை அளித்தமையால் கவிராஜன் ஆகிறார். அவரின் பக்தியுடை வாழ்வால் அவர் தவராஜனாகிறார். பல சிறப்புக்களைப் பெற்ற வாதவூரர் நிறைவில் நடராஜனுக்கே உரியவராய் திகழ்கிறார் எனலாம்.

வாதவூரர் வண்டாய் பறந்தார். அந்த வண்டு 'திருவாசகம்' என்னும் தேன் கூட்டையும் 'திருக்கோவையார்' என்னும் தேன் கூட்டையும் கட்டி நாமனைவரும் நாளும் பொழுதும் வேண்டிய தேனைப்பெற்று சுவைத்திட வழி சமைத்திருக்கிறது எனலாம்.

**உடையாள் உந்தன் நடு இருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்து
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே**

- என்னும் வேண்டுகளை வாதவூர் வண்டு இறைவனிடம் சொல்லுகிறது.இது தெவிட்டாத் தேனாகி இனிக்கிறதல்லவா?

திருவாசகமென்னும் தேன் பருகினார் ஓர் அடியவர். அவரால் தனது உணர்வினை வெளிப்படுத்த சொற்களைத் தேடுகிறார்.அவர் தேடியதை அளிக்கிறார் பருகுவோம் வாருங்கள்....

**வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்துஎன்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே**

- இப்படிச் சுவைத்தவர்தான் வள்ளல் பெருமான்.


வாதவூர் வண்டு மலர்கள்தோறும் எடுத்துவந்த தேனால் ஆக்கப்பட்ட திருவாசகத்தை தமிழர்களாகிய நாம் மட்டும் சுவைத்து மகிழ்வது பெருமைதான். ஆனால் தமிழ் அறியா ஒருவர், எங்கள் சைவம் சாரா ஒருவர், அதுவும் ஆசிய நாட்டைச் சேராத ஒருவர், ஆங்கில நாட்டைச் சேர்ந்த ஒருவர் கிறிஸ்தவ பாதிரியாரானவர் திருவாசகமென்னும் தேனைத் தொட்டதும் தன்னை மறந்தார். அந்தத் தேன்கூட்டுக்குள்ளேயே புகுந்து தேனை மாந்திக் கொண்டே இருந்தார் என்பது மனமிருத்த வேண்டிய கருத்தல்லவா!

சிவனை முழுமுதற் கடவுளாகப் பாடி உருகிடும் திருவாசகம் என்னும் தேன் – ஒரு கிறிஸ்தவ அருட்தந்தையை எப்படிக் கவர முடியும்? இது ஒரு முரண்பட்ட நிலையாகத் தெரிகிறது அல்லவா? இறைவன் என்பவன் ஒருவனே. திருவாசகத்தில் 'சிவனாக' காட்சியளிக்கும் ஆண்டவன்தான் - பரமண்டலத்தில் வீற்றிருக்கும் பிதாவாக கிறிஸ்தவ அருட்தந்தை ஜி.யூ போப் அவர்களின் உள்ளத்தில் பதிந்திருக்கலாம். இதனால் அவர் ஆங்கிலத்தில் திருவாசகத்தேனை மொழி பெயர்த்து அனைவருமே பயனுறச் செய்தார். இலண்டன் மாநகரில் கிறிஸ்தவ தேவாலயத்தில் முழந்தாளிட்டு செபம் செய்யும் வேளை 'தன்னருகில் மாணிக்கவாசகரும் செபம் செய்வதாக' தான் உணர்ந்தமையை – திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்பு நூலில் பதிவிட்டுள்ளார்.

இதுவே சமயங்கடந்த பக்தி நிலை. இதனை வாதவூர் வண்டின் 'திருவாசகம் என்னும் தேன்' செய்திருக்கிறது.

**நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான்தாள் வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் ஆனெகன் இறைவனடி வாழ்க**

என்று இறைவனுக்கு வாழ்த்துக் கூறிய வாதவூர் வண்டினை நாமனைவரும் மனத்தினில் இருத்துவோம். இருத்தினால் ......



தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீங்கும்; அல்லல் அறுபடும்; ஆனந்தம் பெருகும். அத்துடன் மருவா நெறியும் அளிக்கும்.

**அருள்வாத வூரர்சொல அம்பலவர் தாமெழுதும்
திருவா சகத்தைத் தெளிந்தால் - கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமரரு ளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்**

# நம் மத்தியில் பவளவிழாக் காணும் கலைஞர் மாவை நித்தியானந்தன்

## ஆஸ்திரேலியாவில் முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பாரதி பள்ளியை ஆரம்பித்து இயங்க வைக்கும் ஆளுமை



- முருகபூபதி -

தமிழ்க் குழந்தைகளை மகிழ வைக்கக்கூடியதான காட்சி ஊடகத்தின் வளர்ச்சி தமிழர் புலம்பெயர்ந்த சூழலில் மட்டுமல்ல, தாயகச்சூழலிலும் மிக அவசியமான ஒன்றாக உள்ளது. இத்தேவையை நிறைவுசெய்வது எப்படி என்பதைப்பற்றி எமது சமூகம் சிந்தித்தல் அவசியம்.

- என்று பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எழுதியும் பேசியும் வந்திருக்கும் கலைஞரும் எழுத்தாளருமான மாவை நித்தியானந்தன் இந்த ஆண்டு தனது 75 வயதினை அடைந்து பவள விழாக் காண்கின்றார்.

மாவை நித்தியானந்தன், சிறுவர்களுக்காக நாடகம் எழுதி இயக்கியவர் மாத்திரமல்லர், கல்வி, விவசாயம் தொடர்பாக சமூக அக்கறை கொண்ட அயராத செயற்பாட்டாளருமாவார்.

பிறந்த ஊருக்குப்பெருமை சேர்ப்பித்த கலைஞர்கள், எழுத்தாளர்கள் வரிசையில் நித்தியானந்தனும் தாம் பிறந்த மாவிட்டபுரம் ஊருக்கு தனது வாழ்வும் பணிகளும் ஊடாக புகழைச் சேர்ப்பித்தவர்.

அரை நூற்றாண்டுக்கு முன்பிருந்தே எழுத்து, நாடகம் முதலான துறைகளில் ஈடுபட்டு வந்திருக்கும் மாவை நித்தியானந்தன், தென்னிலங்கை கட்டுப்பெத்தை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டதாரியாகவும், பின்னர் பிரிட்டிஷ் கவுன்ஸிலால் தெரிவாகி லண்டன் சென்று படித்தும் மேலதிக பட்டம் பெற்றவர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் முன்னாள் மாணவரான நித்தியானந்தன், அக்கல்லூரியில் பயின்ற காலத்திலேயே கவிதை, நாடகம் முதலான துறைகளில் எழுதத் தொடங்கினார்.




கட்டுப்பெத்தை பல்கலைக்கழகத்தில் இணைந்த காலப்பகுதியில் கொழும்பில் கலை, இலக்கிய நண்பர் கழகம், மற்றும் தேசிய கலை இலக்கியப் பேரவை முதலான அமைப்புகளிலும் அங்கம் வகித்து மல்லிகை முதலான இதழ்களிலும் இலக்கியப்பிரதிகள் எழுதியவர்.

இலங்கையின் முன்னணி திரைப்பட இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிசை சந்தித்து, அவர்பற்றிய அறிமுகக்கட்டுரையை அக்காலப்பகுதியில் மல்லிகையில் எழுதி தமிழ் வாசகர்களுக்கும் அந்தத் திரையுலக மேதையை அறிமுகப்படுத்தியவர்.

கட்டுப்பெத்தை மாணவர்களின் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடான நுட்பம் மலரிலும் எழுதியமையுடன், அச்சங்கத்தின் ஆண்டு விழாவில் தனது 'ஐயா லெச்சன் கேட்கிறார்' என்ற நாடகத்தையும் எழுதி, இயக்கி மேடையேற்றினார். இந்நாடகம் பல வருடங்களுக்குப் பின்னர் ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் மேடையேற்றம் கண்டது.

மாவை நித்தியின் மற்றும் ஒரு நாடகம் 'திருவிழா'. பாடலும் வசனமும் இசையும் கலந்த அரசியல் அங்கத நிகழ்வு. யாழ்ப்பாணம் குடாநாடெங்கும் மேடையேறிய இந்நாடகம், வவுனியாவிலும் ஒரு பாரதி விழாவில் இடம்பெற்றது.

இவ்வாறு நாடத்துறைக்கும் வளம் சேர்த்துள்ள மாவை நித்தியானந்தன், சிறுவர் நாடகத்திலும் தனது கவனத்தை தீவிரமாக்கியவர்.

ஆஸ்திரேலியாவுக்கு 1989 இல் புலம்பெயர்ந்த பின்னர், இங்கு வளரும் தமிழ்க்குழந்தைகளின் தேவை கருதி மெல்பன் மொனாஷ் பல்கலைக்கழகத்தில் 'பெற்றோர் பிள்ளைகள் உறவு' என்ற தொனிப்பொருளில் முழுநாள் கருத்தரங்கையும் 1992 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நடத்தினார்.

புகலிட நாடுகளில் தலைமுறை இடைவெளியினால் தோன்றும் முரண்பாட்டுச் சிக்கல்களுக்கு அர்த்தமுள்ள தீர்வு காணும் நோக்கில் நடத்தப்பட்ட அக்கருத்தரங்கின் தொடர்ச்சியாக மெல்பனில் தமிழ்க் குழந்தைகளுக்காக பாரதி பள்ளி என்ற பாடசாலையை ஆரம்பித்தார்.

தனது கல்லூரி ஆசானும் ஈழத்தின் மூத்த கவிஞருமான அம்பி அவர்களை அழைத்து இந்தத் தமிழ்ப் பாடசாலையை ஆரம்பித்தார். பாரதி பள்ளி விக்ரோரியா மாநிலத்தில் சில பிரதேசங்களில் வளாகங்கள் அமைத்து தங்கு தடையின்றி சீராக இயங்கி வருகின்றது.

வெள்ளிவிழாவையும் கண்டுவிட்ட பாரதி பள்ளி மாணவர்களை பயிற்றுவித்து பாப்பா பாரதி என்ற குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளை தொகுத்து காணொளி இறுவட்டினையும் மூன்று பாகங்களில் வெளியிட்டார்.

அத்துடன் மெல்பன் கலைவட்டம் என்ற கலை, இலக்கிய அமைப்பினையும் உருவாக்கி, இலக்கிய கருத்தரங்குகளும் நடத்தி நாடகங்களையும் எழுதி மேடையேற்றினார்.

அவற்றுள் கண்டம் மாறியவர்கள், அம்மா அம்மா என்பன முக்கியமானவை. கொழும்பு மெயில் என்ற பாடலும் இசையும் இணைந்த நிகழ்ச்சியையும் மாவை நித்தி தயாரித்து மேடையேற்றினார். இந்த நிகழ்ச்சியும் பல மேடைகளைக் கண்டிருக்கிறது.

பாரதி பள்ளியில் தமது குழந்தைப்பருவத்தில் பயின்ற மாணவர்கள், பின்னாளில் பல்கலைக்கழகம் பிரவேசித்து பட்டதாரியானதன் பின்னர், அவர்களில் சிலரும் இதே பாரதி பள்ளியில் ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தகுந்த செய்தி.

பாரதி பள்ளியின் ஆண்டு விழாக்களிலும் மாவை நித்தியின் சிறுவர் நாடகங்களுக்கு குறைவிருக்காது. ஆஸ்திரேலியாவில் பல்கலைக்கழகங்களில் பிரவேசிப்பதற்காக தோற்றும் மாணவர்கள் தமிழையும் ஒரு பாடமாக கற்று, தமிழ் மொழிப்பரீட்சையை எழுத முடியும். இந்த ஏற்பாட்டை முன்னின்று செய்தவர்களில் மாவை நித்தியும் ஒருவர்.

தமிழ் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை நடத்துவதிலும் தமது நேரத்தைத் தொடர்ச்சியாக செலவிட்டு வந்திருக்கும் மாவை நித்தியானந்தன், கல்வி, கலை, இலக்கியத்துடன் மாத்திரம் தனது சமூக அக்கறையை வரையறுத்துக்கொள்ளாமல் அகலக்கால் பதித்து, எமது தாயகத்தில் வடக்கில் மாவிட்டபுரத்தில் தனது தந்தையின் நினைவாக திருநாவுக்கரசு விவசாயப்பண்ணை பயிற்சி முகாம் ஒன்றையும் பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்தார்.

அதற்காகவும் அவர் வருடந்தோறும் அடிக்கடி இலங்கை சென்று வருபவர்.

இரவு, பகல் என்று பாராமல் ஓய்வு ஒழிச்சலின்றி இயங்கி வரும் மாவை நித்தியானந்தன் பன்முக ஆளுமையாக எம்மத்தியில் திகழுகின்றார்.

சிறிது காலம் மெல்பனில் எழுத்தாளர் நடேசன் வெளியிட்ட உதயம் இருமொழி மாத இதழிலும் மாவை நித்தியானந்தன் துணை ஆசிரியராக பணியாற்றியவர். அத்துடன் இங்கு விமல் அரவிந்தன் வெளியிட்டு வந்த மரபு இதழிலும் இலக்கியப்பிரதிகள் எழுதினார்.




சமகாலத்தில் இலங்கை எதிர்நோக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளூர் உணவு உற்பத்தியின் மூலமும் ஓரளவு தீர்வு காண முடியும், இத்தகைய நெருக்கடி எதிர்காலத்தில் தோன்றக்கூடும் என தீர்க்கதரிசனமாக மாவை நித்தியும் சிந்தித்திருப்பாரோ என்றும் அந்த மாதிரி விவசாய பண்ணையை பார்க்கும்போது எவருக்கும் தோன்றலாம்.




அங்கே பல விவசாய ஆராய்ச்சி மாணவர்களும் பயிற்சி பெற்றுவருகின்றனர். பல்கலைக்கழகங்களில் விவசாய பீடத்தில் பயிலும் மாணவர்களும் அங்கே சென்று மேலதிக அனுபவங்களை பெற்று வருகின்றனர்.

மாவை நித்தியின் ஆளுமைப் பண்பில் துலக்கமாகியிருப்பது அவரது தீர்க்கதரிசன இயல்புகளே.

பவள விழாக்காணும் மாவை நித்தியானந்தன், நல்லாரோக்கியத்துடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.






# ஆயரின் பெயரில் அமைந்து அரும்பணியில் ‘பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்’ நிறுவனம்!

## யாழ் ஊடக அமையத்துடன் இணைந்து புதிய ஊடகப்பணிகள்

**- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -**
**(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)**




இலக்கம் 891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மற்றும் இலக்கம் 84 ஏ, இராசாவின் தோட்டம், வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் யாழ் ஊடக அமையம் ஆகிய இருநிறுவனங்களும் இணைந்து பல ஊடகப் பணிகளை ஆற்றவுள்ளன. இப்பணிகளை விளக்குவதே அவ்வாக்கத்தின் நோக்கமாகும்.

இப்பணிகளில் முக்கியமாக இரண்டு பணிகள் முன்னுரிமைப்படுத்தப்படும். முதலாவது வட இலங்கை செய்தியாளர் பணி விவரக் கையேடு வெளியிடல் அமையும். இரண்டாவதாக செய்தியாளன் ஊடக தூது மடல் - ஊடக தூது விடுவோம் - ஊடக உறவுகளை இணைப்போம் என்னும் விருது வாக்குடன் மாதாந்தம் இலவசமாக வெளியிடப்படும் செய்தி மடல் அமையும். இது விரைவில் வெளியிடப்படும்.

இவற்றை விட பிரத்தியேக ஊடக நூல் நிலையம் - மறைந்த செய்தியாளர்களின் வரலாற்றைப் பதிவு செய்தல் - ஊடக விருது - ஊடகக் கல்வி - ஊடக ஆய்வு வெளியீடு - செய்தியாளன் ஊடக தூது மடல் - ஊடக தூது விடுவோம் - ஊடக உறவுகளை இணைப்போம் என்னும் விருது வாக்குடன் மாதாந்தம் இலவசமாக வெளியிடல் - ஊடக இலங்கை ஊடக நூல்களின் பட்டியல் - ஊடக நூல் வெளியீடு - அச்சு, மின் இணைய ஊடகங்களின் வரலாற்றினைப் பதிவு செய்தல் போன்ற பல பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

### பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் பணி விளக்கம்

முதலில் இலக்கம் 891 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இன்று வரை ஆற்றிய பணிகளை பதிவிட்டு பின்னர் இனி ஆற்றவுள்ள பணிகளை நோக்குவோம்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இலக்கம் 891, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 1997ஆம் ஆண்டு அப்போதைய யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பெயரில் உருவாக்கப்பட்டது.

இலங்கையில் செய்தியாளராகப் பணியாற்றும் தமிழ் பேசும் ஊடகவியலாளருக்கு ஊடகவியல் கல்வி - ஊடகவியல் பயிற்சி மற்றும் ஊடகவியல் வழிகாட்டல்களையும் வழங்குவதே இந்த ஊடக நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி (யோவான் 18:37) என ஆளுநர் பிலாத்து முன்னிலையில் இயேசு சொன்ன தன் பணி விளக்க வார்த்தைகளையே பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் தன் விருது வாக்காகிப் பணி புரிகிறது.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் தனக்கென அமைத்த இலச்சினை விளக்கம் பின்வருமாறு அமைகிறது:-

உலகின் பெரிய நான்கு மதங்களான பௌத்தம் - இந்து - கிறிஸ்தவம் - இஸ்லாம் ஆகிய மதங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இலங்கைத் திருநாட்டில் மொழி வாரியா நோக்கின் தமிழ், சிங்களம் என்ற இரு இனங்களே உள்ளன.

இந்த இரு இனங்களுக்கிடையில் இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் சங்கிலித் தொடராகக் காத்திற்குக் காலம் இனக்கலவரங்கள் நடைபெற்று அதன் உச்சக் கட்டமாக 03 தசாப்த கால உள்நாட்டுப் போர் நடைபெற்றுள்ளது.

இவ்வாறு இனப்பிரச்சினையால் பிளவுபட்டுப் போயிருக்கும் இலங்கை நாட்டின் சிங்கள மற்றும் தமிழ் இனங்களை இணைக்கும் பாலமாகக் கத்தோலிக்கமும் ஊடகமும் விளங்குகிறது.

இலங்கையில் 08 சதவீத கத்தோலிக்க மக்கள் வாழ்கிறார்கள் என்பதையும் குறிக்க இலங்கையின் மேல் சிவத்த நிற சிலுவை வரையப்பட்டுள்ளது.

அடுத்து இலங்கை நாட்டின் சிங்கள மற்றும் தமிழ் இனங்களை இணைக்கும் பாலமாக ஊடகம் விளங்குகிறது.

புறாக்கள் சமாதானத்தைக் குறிக்கும் பறவைகள். அவை செய்திகளைச் சொண்டில் காவிக் கொண்டு தூது செல்லும் பணியில் முன்னணி வகிப்பவை.

சிலுவையின் நிழலில் இருந்து வெண்ணிறப் புறாக்கள் ஒலிவக் கிளையைச் சொண்டுகளில் தாங்கிக்கொண்டு நான்கு திசை நோக்கியும் சிறகடித்துப் பறக்கின்றன.

சமாதானத்தைக் குறிக்கும் ஒலிவ மரக் கிளையினை வாயினில் காவி ஆங்கிலத்தில் செய்தியைக் குறிக்கின்ற நியூஸ் என்ற ஆங்கில வார்த்தையின் ‘என்’ என்ற வடக்கு - ‘ஈ’ என்ற கிழக்கு - ‘டபிள்யு’ என்ற மேற்கு - ‘எஸ்’ என்ற தெற்கு ஆகிய நான்கு திசைகளையும் நோக்கிச் சிறகடித்துப் பறந்து சமாதானப் பறவையான புறாக்கள் ஊடகத் தூது விடுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

கோதுமை மணி மண்ணில் விழுந்து ... மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் (யோவான் 12:24) என்பதையே இலங்கைப் படத்தைச் சுற்றி பொறிக்கப்பட்டுள்ள நெற்கதிர்கள் நினைவுபடுத்தி பிசப் சவுந்தரம் மீடியா சென்ரறும் அவ்விதமே தன்னை அர்ப்பணித்துப் பணியாற்ற முற்படும் எனச் சொல்லி நிற்கிறது.

### பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இன்று வரை ஆற்றிய பணிகள்

(01) 1997ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை இலவச ஊடகவியற் பயிற்சிகளை யாழ் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் பிரபல செய்தியாளர்களின் உதவியுடன் ஊடகவியலாளர் மற்றும் பயிற்சியாளருக்கு சமய வேறுபாடின்றி வழங்கியது.

1997 - 2007 காலப்பகுதியில் நாட்டின் போர் காரணமாக தடைப்பட்ட ஆண்டுகளைத் தவிர மற்ற எல்லா ஆண்டுகளிலும் இப்பயிற்சி வழங்கப்பட்டது. மொத்தமாக 13 ஊடகப் பயிற்சிகள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

ஊடகக் கல்வியை இன்றுபோல் அன்று பாடசாலைகளோ பல்கலைக்கழகங்களோ வழங்காத போது ஊடகக் கல்வியின் முக்கியத்துவத்தையும் அதன் எதிர்காலத்தையும் முன்கூட்டியே திட்டமிட்டு இப்பணி ஆற்றப்பட்டது. அன்று ஊடகக் கல்வி எங்கும் கிடைக்காமையால் பல நூற்றுக்கணக்கானோர் இப்பயிற்சிகளில் கலந்து பயனடைந்து உள்ளனர்.

**காலைக்கதிர்** Kalaikkathir

**கிறிஸ்தவ செய்தி இதழ்**

**கிறிஸ்தவ செய்தி**

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர்

### பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மூலம் வெளியிடப்பட்ட ஊடகவியல் நூல்கள்

(02) 2001ஆம் ஆண்டு முதல் இன்றுவரை முதல் அச்சு - மின் மற்றும் சமூக ஊடகவியல் துறைகளில் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மூலம் 14 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்:-

(01) 2021 - விசேட செய்தி அறிக்கையிடல் - (02) 2015 - நேரலை பத்திரிகையியல் ஓர் அறிமுகம் (03) 2015 - செய்தி நடத்துனர் பணியின் அடிப்படைகள் (04) 2012 - புலனாய்வு அறிக்கையிடல் (05) 2011 - ஆசிரியத்தலையங்கம் ஓர் அறிமுகம் (06) 2007 - சித்திரிப்பு எழுத்துக்கள் ஓர் அறிமுகம் (07) 2006 - அச்சு ஊடக செய்தி அறிக்கையிடல் (08) 2005 - செய்தித் தலைப்புக்கள் ஓர் அறிமுகம் (09) 2004 - ஊடக நேர்காணல்கள் ஓர் அறிமுகம் (10) 2003 - மின்இயக்க பத்திரிகை இயல் ஓர் அறிமுகம் (11) 2003 - ஊடக இயல் கலைச்சொல் அகராதி (12) 2002 - பத்திரிகை இயல் அடிப்படைகள் (13) 2001 - பாதுகாவலன் 125ஆவது ஆண்டுமலர் 04-08-2001 (தொகுப்பாசிரியர்) (14) 2001 - பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்.

### விருது பெற்ற நூல்களின் விவரம்

(01) 2011 - எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளிகளைப் பாராட்டும் நோக்கில் நடத்திய தமிழியல் விருது 2012 நிகழ்வின்போது 2011ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களுள் சிறந்த கட்டுரை நூலாகத் தெரிவு செய்யப்பட்ட அருளதிரு ரூபன் மரியாம்பிள்ளை எழுதிய ‘ஆசிரியர் தலையங்கம் ஓர் அறிமுகம்’ என்ற நூலுக்கு செந்தமிழ்ச்செல்வர் சு.சிறிகந்தராஜா தமிழியல் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எஸ்.சார்ள்ஸ் மற்றும் எழுத்தாளர ஊக்குவிப்பு மைய மேலாளர் டாக்டர் ஒ.கே.குணநாதன் ஆகியோர் ஒப்பமிட்டசான்றிதழ் மற்றும் விருது வழங்கும் விழா மட்டக்களப்பில் நடைபெற்றது.

(02) 2005 - வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் அமைச்சினால் நடத்தப்பட்ட இலக்கிய நூல் பரிசுத் தெரிவில் 2005ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ‘செய்தித் தலைப்புக்கள் ஓர் அறிமுகம்’ என்ற நூல் தமிழ் இலக்கிய விழா 2006இல் பல்துறைப் பிரிவில் விருது பெற்றது. வடகிழக்கு மாகாண செயலர் திரு.ஆர்.தியாகலிங்கம் அவர்களால் ஒப்பமிடப்பட்ட சான்றிதழும் விருதும் 16 ஒக்ரோபர் 2006 அன்று வழங்கப்பட்டது.

# புத்தரின் கபில்வஸ்து நினைவுச்சின்னங்கள் மங்கோலியாவில் 11 நாள்கள் தரிசனத்துக்கு

இந்தியாவிற்கும் மங்கோலியாவிற்கும் இடையிலான வலுவான இருதரப்பு உறவுகளை எடுத்துக் காட்டிய இந்திய மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் கலாசார அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், மங்கோலியாவில் பேணி மதிக்கப்படும் புத்தரின் நினைவுச்சின்னங்கள் எவ்வாறு இரு நாடுகளுக்கும் இடையிலான ஒற்றுமையையும் நெருக்கத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதையும் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

மங்கோலியாவில் பதினொரு நாள்கள் காட்சிக்கு - மக்கள் தரிசன்னத்துக்கு - வைக்கப்பட்டிருந்த புத்தபெருமானின் புனித கபிலவஸ்து நினைவுச் சின்னங்களை மேக்வால் கடந்த திங்கட்கிழமை பெற்றுக்கொண்டார்.

மங்கோலியாவில் பதினொரு நாள்களுக்குப் புத்தரின் நினைவுச் சின்னங்களை காட்சிப்படுத்தியதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகள் மற்றும் நெருக்கம் வெளிப்படுத்தப்பட்டது என்றார் அவர்.

இந்தியாவும் மங்கோலியாவும் பகிர்ந்து கொள்ளும் பலப்படுத்தப்பட்ட இருதரப்பு உறவுகளை அவர் நினைவு கூர்ந்தார்.



நினைவுச்சின்னங்களை காட்சிப்படுத்துவது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வு இரு நாடுகளுக்கும் இடையே சகோதரத்துவத்தை வளர்த்தது என்றும் அவர் கூறினார்.- 'கபில்வஸ்து நினைவுச்சின்னங்கள்' என்று அழைக்கப்படும் நான்கு புனித நினைவுச்சின்னங்களை குண்டு துளைக்காத இரண்டு சிறப்புக் கலசங்களில் இந்திய விமானப் படை விமானத்தில் மத்திய அமைச்சர் ரிஜிஜு தலைமையிலான இந்தியப் பிரதிநிதிகள் கொண்டு வந்திருந்தனர்.

புத்த மதத்தின் மிகவும் புனிதமான நினைவுச்சின்னங்களில் ஒன்றாகக் கருதப்படும் புத்தரின் புனித நினைவுச்சின்னங்கள் 29 ஆண்டுகளுக்குப் பிறகு மங்கோலியாவுக்குத் திரும்பியமை குறிப்பிடத்தக்கது. பௌத்தத்தின் மிகவும் புனிதமான நினைவுச்சின்னங்களில் இவை பிரதானமானவையாகக் கருதப்படுகின்றன.

உலான்பாதரில் உள்ள கந்தன் தெக்சென்லிங் மடாலய வளாகத்தில் உள்ள பட்சகன் கோயிலில் பதினொரு நாள்கள் இவை காட்சிப்படுத்தப்பட்டன.

புனித நினைவுச்சின்னங்கள், 'ஏஏ' வகை தொல்பொருள்கள் மற்றும் கலைப் பொக்கிஷங்கள் இந்தியாவில் 2015 ஆம் ஆண்டில் இருந்து விசேட கட்டுப்பாட்டுச் சட்டங்களின் கீழ் வைக்கப்பட்டுள்ளன.அவை அவற்றின் நுட்பமான தன்மையைக் கருத்தில் கொண்டு கண்காட்சிக்காக நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்லக்கூடாது என்பது சட்ட விதி.

இருப்பினும், மங்கோலிய அரசாங்கத்தின் சிறப்பு வேண்டுகோளின் பேரில், இந்திய அரசாங்கம் விதி விலக்கு அளித்தது. இரு நாடுகளுக்கு இடையே கலாச்சார மற்றும் ஆன்மீக உறவுகளை அதிகரிக்கும் நோக்கில் மங்கோலியாவில் புனித நினைவுச் சின்னங்களை காட்சிப்படுத்த இந்திய அரசு அனுமதித்தது.

**(மூலம்: ஏ.என்.ஐ.)**

# அந்நிய நேரடி முதலீடுகளுக்கு விருப்பமான நாடாக இந்தியா!

## வெளிநாட்டு நேரடித் தொழில் முயற்சிகள் எட்டு ஆண்டுகளில் அபரிமித அதிகரிப்பு

கடந்த எட்டு ஆண்டுகளில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் பலனளித்துள்ளமையால், நேரடி அந்நிய முதலீடுகளுக்கு விருப்பமான நாடாக இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது எனப் புதிய பதிவுகளை உறுதிப்படுத்துகின்றன.

2020 - 21 இல் இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு 81.97 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. நாடாளுமன்ற அமர்வின் போது இந்திய அரசாங்கம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. உலகளாவிய முதலீட்டாளர்களிடையே, இந்தியாவின் நேரடி அந்நிய முதலீடுகளுக்கான இந்தப் போக்குகள், ஒரு விருப்பமான முதலீட்டு இடமாக அதன்(இந்தியாவின்) அந்தஸ்தை உறுதிப்படுத்தி அங்கீகரிக்கின்றன என இந்திய அரசாங்கம் கூறியதாக 'சவுதி கெஜட்' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தியா ஒரு கவர்ச்சிகரமான மற்றும் முதலீட்டாளர்களுக்கு ஏற்ற இடமாக இருப்பதை உறுதி செய்வதற்காக, மத்திய அரசாங்கம் நேரடி அந்நிய முதலீடுகளுக்கான கொள்கைகளைத் தொடர்ந்து மதிப்பாய்வு செய்து, அவ்வப்போது குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்து வருகிறது என்பது அவதானிக்கத்தக்கது.

இந்தியாவின் நேரடி அந்நிய முதலீடுகளுக்கான கொள்கை தாராளமயமானது மற்றும் வெளிப்படையானது.

பெரும்பாலான துறைகள் தன்னியக்க வழியின் கீழ் நேரடி அந்நிய முதலீடுகளுக்கு வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன. எளிதாக வணிகம் செய்வதற்கும் முதலீடுகளை ஈர்ப்பதற்கும் நேரடி அந்நிய முதலீடுகளுக்கான கொள்கையை மேலும் தாராளமயமாக்கவும் எளிமைப்படுத்தவும் வசதியாக நிலக்கரி சுரங்கம், ஒப்பந்த உற்பத்திகள், டிஜிட்டல் மீடியா, ஒற்றை பிராண்ட் சில்லறை வர்த்தகம், சிவில் விமானப் போக்குவரத்து, பாதுகாப்பு, காப்பீடு மற்றும் டெலிகாம் போன்ற துறைகளில் சமீபத்தில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் சோம் பிரகாஷ், ராஜ்யசபாவில் (நாடாளுமன்றத்தில் நாட்டின் மேல்சபை) எழுத்துப் பூர்வமாக அளித்த பதிலில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாட்டின் அந்நிய நேரடி முதலீடு முன்னெப்போதும் இல்லாத விதத்தில் மிக அதிகமாக உள்ளது என்று தெரிவித்தார்.

உலக வர்த்தகத்தை நாட்டிற்குள் கொண்டு வர அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து கேரளாவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.



சி.பி.ஐ.(எம்), நாடாளுமன்ற உறுப்பினர் ஜான் பிரிட்டாஸ் மற்றும் லோக்தந்திரிக் ஜனதா தளம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வி.ஷ்ரேயாம்ஸ் குமார் ஆகியோர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே மேற்படி தகவல் வெளியிடப்பட்டது.

இணை அமைச்சர் சோம் பிரகாஷ் அம் சமர்ப்பித்த எழுத்து பூர்வ அறிக்கையில், இந்தியாவில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் முதலீட்டை ஈர்ப்பதற்கும் பல்வேறு முயற்சிகள், திட்டங்கள் அரசாங்கத்தால் தொடங்கப்பட்டுள்ளன. - என்றார்.

இந்த முன்முயற்சிகளின் காரணமாக, உலக வங்கியின் தொழில் தொடங்குதல் அறிக்கை - 2020 இன்படி, 2014 ஆம் ஆண்டில் 142 ஆவது இடத்தில் இருந்த இந்தியா, உலக வங்கியின் எளிதாக வணிகம் செய்வதற்கான தரவரிசையில் 63 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் விரிவான சீர்திருத்தப் பயிற்சியைத் தொடங்கியிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

தொழில் சீர்திருத்த செயல் திட்டத்தின் கீழ் மாநில அரசுகளுடன் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (டிபிஐஐடி) நடத்திய ஆலோசனைக்குப் பிறகு இந்த சீர்திருத்தங்கள் தொடங்கப்பட்டன என்று அவர் கூறினார்.

இந்த திட்டத்தின் கீழ் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் செயல்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் அடிப்படையில் அவை தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. சில குறிப்பிட்ட அளவுருக்கள் உள்ளன, அவை கருத்தில் கொள்ளப்பட்டு தரவரிசை செய்யப்படுகிறது. இந்தப் பயிற்சி மாநிலங்கள் முழுவதும் வணிகச் சூழலை மேம்படுத்த உதவியுள்ளது' என்றும் அவர் கூறினார்.

முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக அரசாங்கம் எடுத்த மற்ற நடவடிக்கைகளைப் பற்றிப் பேசிய பிரகாஷ், நாட்டில் முதலீடுகளை துரிதப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு அதிகாரமளிக்கப்பட்ட செயலாளர்களின் குழுவைப் பட்டியலிட்டார். முதலீட்டாளர்களைக் கையாள்வதற்கும், துறைசார் மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கும் திட்ட மேம்பாட்டுக் கலங்களின் அமைப்பு குறித்தும் அவர் வலியுறுத்தினார்.

ஜி.ஐ.எஸ். - இயக்கப்பட்ட இந்தியா இண்டஸ்ட்ரியல் லேண்ட் பேங்க், முதலீட்டாளர்கள் தங்கள் விருப்பமான முதலீட்டு இடத்தைக் கண்டறிய உதவும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது. முதலீட்டாளர்களுக்கான அனுமதிகளை எளிதாக்கும் வகையில், தேசிய ஒற்றைச் சாளர அமைப்பும் (NSWS) செப்ரெம்பர் 2021 இல் தொடங்கப்பட்டது, என்றார்.

டி.பி.ஐ.ஐ.டி. வெளியிட்ட தரவுகளின்படி, இந்தியாவின் மிக உயர்ந்த அந்நிய நேரடி முதலீடு ஆண்டுக்கு 1.95 சதவீதம் அதிகரித்துள்ளது. 2021 - 22 நிதியாண்டில் அந்நிய நேரடி முதலீட்டு வரவின் முன்னணி முதலீட்டாளர் நாடுகளின் அடிப்படையில், சிங்கப்பூர் 27 சதவீதத்துடன் உச்சத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து அமெரிக்கா (18 சதவீதம்) மற்றும் மொரீஷியஸ் (16 சதவீதம்) உள்ளன. 2021 - 22 நிதியாண்டில் அந்நிய நேரடி முதலீட்டு வரவின் முதன்மை பெறுநர் துறை கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் ஆகும். ஊடக முன்னிறுத்தலின் படி, சேவைத் துறை (12 சதவீதம்) மற்றும் ஓட்டோமொபைல் துறை (12 சதவீதம்) தொடர்ந்து 25 சதவீத பங்குடன் முதலிடத்தில் உள்ளன.

சுவாரஸ்யமாக, கொவிட் தூண்டப்பட்ட தொற்று நோய் இருந்தபோதிலும், 2020 - 21 இல் இந்தியாவிற்கு வந்த அந்நிய நேரடி முதலீடு 81.97 பில்லியன் அமெரிக்க டொலர்கள். மொத்த அந்நிய நேரடி முதலீட்டில் இணைக்கப்படாத அமைப்புகளின் பங்கு மூலதனம், மறு முதலீடு வருவாய் மற்றும் பிற மூலதனம் ஆகியவையும் தனியாக அடங்கும்.

உலக முதலீட்டாளர்கள் இந்தியாவை விருப்பமான இடமாகப் பார்ப்பதன் மூலம் உற்பத்தித் துறையும் ஓர் ஊக்கத்தைக் காண்கிறது. பொருளாதாரத்திற்கு ஒரு பெரிய ஊக்கமாக, முந்தைய நிதியாண்டு 2020 - 21 (12.09 பில்லியன்அமெரிக்க டொலர்கள் உடன்) ஒப்பிடுகையில், 2021 - 22 நிதியாண்டில் (USD 21.34 பில்லியன்அமெரிக்க டொலர்கள்) உற்பத்தித் துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டு வரத்து 76 சதவீதம் அதிகரித்துள்ளது.

**(மூலம்:ஏ.என்.ஐ.)**

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-53



**விடுதலைப்புலிகளின் தொடர்ந்த போராட்டம்**

விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பான போராட்டத்தில் அதற்கான களங்களில் அவர்களின் வீரங்களை, தியாகங்களை மறுப்பதற்கு இல்லை. தங்களது இலட்சியத்தின் நம்பிக்கையில் பற்றுறுதியோடும், கொள்கைப்பிடிப்புடனும், திடசங்கற்பத்துடனும் தீர்வுக்காகக் கடைசிவரை அவர்கள் இருந்தமையும், மக்களை அந்த உணர்வுகளில் கடைசிவரையும் ஒரு கொதி நிலையிலும் எதிர்பார்ப்பிலும் வைத்திருந்தமையிலும் தவறு காண முடியாது. ஏனெனில் அத்தகைய உறுதியான நிலைப்பாடுகள் மூலம் தான் சிங்களப் பேரினவாதத்தை வழிக்குக் கொண்டுவர முடியும் என்ற எதிர்பார்ப்புப் பலருக்கும் இருந்தது. எனக்கும் இருந்தது. என்னைப்போல் தமிழ் மக்கள் எல்லோரும் ஒரு விடிவுக்காக அவர்களின் அர்ப்பணிப்புகளில் நம்பிக்கை வைத்தார்கள். ஆனால் அவர்களது பாதைகள் பற்றித்தான் சில கருத்துக்கள் குறிக்கப்பட்டன.

என்னைப் பொறுத்த வரையில் அவை எங்கே தடம்புரண்டன என்றால், சில அர்ப்பணிப்பு உள்ள போராளிகளையும் ஓரளவு ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு, பிராந்தியத்தின் வல்லரசான இந்தியாவோடு மோதி ஆயுதபலத்தால் அவர்களை அடிபணிய வைக்கலாமென பிரபாகரன் எடுத்த முடிவுகளுக்கும், அவற்றுக்குத் தாளம் போடப்பட்டதையும்தான் என்று நினைக்கிறேன்.


பின்னர் இதனால் இந்தியாவை விலக்கி வெட்டி ஓடித் தீர்வுகளைப் பெற சிங்கள பேரினவாத அரசுகளுக்கு அனுசரணை ஆனது. அவற்றுக்காக அமிர்தலிங்கம் போன்றவர்களில் இருந்து தொடர்ந்து அரசியல் கொலைகள் போன்றவை எல்லாம் விடுதலைப்புலிகளுக்குப் பாதகங்கள் தந்தன. அவற்றிலிருந்து அவர்கள் தங்களை மீட்டுக் கொள்வது இன்றும் மிகக் கஷ்டமாகவே இருக்கிறது. அப்பொழுது பம்மியவாறும், இப்போது பெருவாரியாகவும் பலர் கூறுவது போல, ஒப்பந்தத்தை ஏற்று இந்தியாவுடன் பயணித்திருந்தால், சைப்ரஸின் துருக்கி இனத்தவர்கள் தன்னிறைவு பெற்றமை போல, கிழக்கு திமோர், போகன்வில் போல சுயநிர்ணயத்துக்கான முனைப்புக்களை இந்தியாவே ஸ்ரீலங்காவின் எதிர்ப்புகளால் தொடங்கி இருக்கலாம்.

ஆனால் நடந்தவை நடந்து விட்டன. நிலத்தில் சிந்திய பாலை மீண்டும் எடுத்துப் பாத்திரத்தில் நிரப்ப முடியாது. சந்தர்ப்பங்களைத்தான் காத்திருந்து இனிப் பாவிக்க வேண்டும்.

சட்டத்தரணி கந்தையா மகேந்திரன் அவரது 'யோகர்சுவாமியும் அவரின் சில விசித்திர சீடர்களும்' என்ற ஆக்கத்தில் "யாரையும் குறை சொல்லிப் பிரயோசனமில்லை. ஏனெனில் அதுதான் கடந்த காலங்கள் முழுக்க நடந்தன. தற்போதும் அதே நிலைதான். எல்லாம் ஏற்கனவே நியமிக்கப்பட்ட நியதியின் படி காலத்துக்குக் காலம் அதற்குரிய நடிகர்கள் தோன்றி நடிக்கப்பட வேண்டிய நாடகங்கள். அவை நடந்து கொண்டேதான் இருக்கும். இவை ஒன்றும் சாதாரண மக்களின் கையிலோ அவர்களின் பிரதிநிதிகள் கையிலோ இல்லை. யார் எதைச் சொன்னாலும் இதுதான் சத்தியம்" – என்று பதிவிடுகிறார் அவர்.

1983 – 1986 களில் எங்களோடு சென்னையில் தமிழர் தகவல் மையத்தில் இணைந்து சேவை புரிந்த காலம். 1983 கலவரத்தின் பின்னர் இந்திரா – ஜே.ஆர். காலம், வட்டமேசை மாநாடுகள், அனைத்துக் கட்சிக் கூட்டங்கள், பின் ராஜிவ் – ஜே.ஆர். காலம், திம்பு பேச்சு வார்த்தை என தொடர்ந்து அவதானித்தவர்.

நண்பர் நவரத்தினம் அவரது குரு யோகர் சுவாமி தனக்கு கூறியதாக இதனை குறிப்பிடுகிறார். "ஒருவர் வாழ்க்கையில் இருந்து கற்பதுதான் மிகப்பெரிய வேதம். வாழ்க்கை என்ற புத்தகத்தில் இருந்து படி. உன்னைக் கூர்ந்து கவனி. அத்துடன் வெளிப்புறச் சூழலுக்கான உனது எதிர்வினையையும் கவனி. எவரையும் அடக்காதே. உன்னுடைய பாதையில் வரும் எல்லாச் சந்தர்ப்பங்களையும் கவனமாகக் கவனி. மகிழ்ச்சியோ, கவலையோ, கோபமோ அதன் பின் ஒரு நாள் முற்றிலும் திடீரென எதிர்பாராத விதமாக இதையெல்லாம் கவனிப்பவரையும், இதில் எல்லாம் ஈடுபடுபவரான அந்த 'கவனிப்பவரையும்' நீ காண்பாய்."



தமிழ் மக்கள் தாங்கள் இன்று இருக்கும் நிலைக்கு தங்கள் வாழ்க்கையில் இருந்து படித்துள்ளார்கள். வரும் சந்தர்ப்பங்களை கவனமாகக் கவனித்து அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

**விடுதலையை விலை பேசுகிறரா சுமந்திரன்?**

'விடுதலையை விலை பேசும் சுமந்திரன்' என்ற தலைப்புடன் வலம் வருகின்ற காணொலியை அனுப்பியவர் நன்கு பரிச்சயமானவர். விடுதலைப் போராட்டத்தில் புலம்பெயரிலிருந்து உணர்வுகளுடன் பங்குபற்றியவர். விடுதலைப் புலிகளின் விசுவாசி. 'ஒரே தலைவன், ஒரே கொள்கை' என்று இன்றும் வாழ்பவர். இப்படியான காணொலிகளை மேலெழுந்த வாரியாகப் பார்ப்பது எனது வழமை. அனுப்பியவருக்காக முழுவதையும் ஊன்றிப் பார்த்துக் கிரகித்தேன்.

அதில், சுமந்திரன் ஐ.நா. மனித உரிமைகள் மன்றில் அரசாங்கத்துக்குக் கால அவகாசம் பெற்றுக் கொடுக்கத் துணை போனமை, எதுவும் கிடைக்கப் போவதில்லை எனத் தெரிந்தும் ரணிலின் அரசுக்கு முண்டு கொடுத்தமை, இனப்படுகொலைக்கு ஆதாரங்கள் போதாது எனக் கொச்சைப்படுத்தியமை, மாவீரர்களையோ, விடுதலைப் போராளிகளையோ மதிக்காதமை, அவர்களின் நினைவு கூரல்களில் பங்குபற்ற மறுக்கின்றமை, கட்சிக்குள் பேதங்கள் வளர்த்து அதனைக் கைப்பற்றி, மக்களின் உணர்வுகள் குறித்து அக்கறை யின்றி, ஸ்ரீலங்கா அரசின் திட்டங்க ளுக்கு ஒத்துப் போக விரும்புகின்றமைதான் அவரது திட்டம் என்று முன்னர் அவர் பற்றிப் பதியப்பட்ட காணொலிகளிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பே இதில் சொல்லப்பட்டிருந்தது.

சுமந்திரன் அங்குமிங்கும் சில சமயங்களில் தான்தோன்றித்தனமாக நடக்கவும், அவரது கருத்துக்களை – நடப்புகளை தமிழ் மக்களுக்காகக் கண்டிப்பதில்லை, எதிர்மறைக் கருத்துக்கள் முன்வைப்பதில்லை என்ற ஆதங்கமும், சுமந்திரன் எப்படி இவ்வளவையும் செய்துவிட்டு உயிருடன் உலாவுகிறார் என்ற வேதனைகளும் அவருக்கு – அந்த அன்பருக்கு – இழையோடியமையை அவதானிக்க முடிந்தது.

உண்மைதான். போருக்கு முன்னைய காலங்களானால் சுமந்திரன் மட்டுமல்ல, அவரைப் போல இன்னும் சிலரும் 'போடப்பட்டு' இருப்பார்கள். இப்படி செய்யப்பட்ட பலவற்றைத்தான் கண்டிக்கிறோம். இதன் விளக்கத்திற்காக வரலாற்றை சிறிது திரும்பிப் பார்ப்பது நல்லது.

அரசாங்கத்துக்கு அனுசரணையானவர்கள், வால் பிடிப்பவர் என அல்பிரட் துரையப்பாவிலிருந்து தொடங்குகிறது விடயம். அந்த படலங்கள் பின்னர் பல மடங்காக எல்லா விடுதலை குழுக்களாலும் நடத்தப்பட்டன. துரையப்பா, குமாரசூரியர் போன்றவர்கள் 'தமிழ் மக்கள் ஸ்ரீலங்காவின் தேசியத்துடன் இணைந்துஒன்றாகமுன்னேறுவதுதான் புத்திசாலித்தனமான வழி' என்ற அரசியலை முன்னெடுத்தவர்கள். அதற்கு அவர்கள் அரசாங்கத்தில் தங்கி இருந்து, பலவிதத்தில் அரசாங்கத்தின் முகவர்களாகச் செயல்பட்டு, அதில் தங்களை நிலைப்படுத்த முயன்றவர்கள். அந்த அரசியலை வளர விட சமஷ்டி கேட்ட தமிழரசுகட்சியோ, பின்னர்கூட்டணியோ, விடுதலைக் குழுக்களோ விரும்பவில்லை. இவர்களினால்–ஏன்பின்வந்த டக்ளத் தேவானந்தா, கருணா, பிள்ளையான், வியாழேந்திரன் போன்றவர்களாலும் – தங்களது வாக்காளர்கள் சிலருக்கு சலுகைகள் பெற்றுக் கொடுக்க முடிந்ததே ஒழிய, தங்களுடைய இனத்துக்குத் தீர்வு ஒன்றை ஆணித்தரமாகப் பெற்றுத் தர முடியவில்லை. அதற்கான முயற்சிகளை முன்னெடுக்கவும் முடியவில்லை. இது சிங்கள பெரும்பான்மைக்கு வசதி ஆயிற்று.

எனது அனுபவத்தின் கணிப்பு சரியானால், சுமந்திரன் தமிழ் தேசியப் பரப்புக்கு வெளியில் இருந்தில்லாமல், அதன் உள்ளேயே இருந்து, தமிழரின் தேசியத்தை ஸ்ரீலங்காவின் தேசியத்தில் இருந்து பார்த்து, அதனுடன் சேர்ந்து பயணிக்கலாம் என்ற குறிக்கோளுடன் இயங்குகிறார் என நினைக்கிறேன். அவர் சொல்பவை அவவற்றைப் பிரதிபலிக்கின்றன.

அவர் பற்றிய விடயங்களைத் தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்)

# விமான நிலையங்களை முழுமையாக மூட வேண்டிய நெருக்கடியான நிலை

இலங்கையில் உள்ள விமான நிலையங்களின் செயற்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக, போக்குவரத்துத் துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

டீசல் கிடைக்காததால் பயணிகள் போக்குவரத்து சேவைகள் கடும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. இதனால், 90 சதவீத தனியார் பஸ்கள் இன்னும் இயங்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் மக்கள் தமது போக்குவரத்துத் தேவைகளை ரயில்கள் மற்றும் உள்ளூர் பஸ்கள் மூலம் பூர்த்தி செய்துகொண்டனர்.

தற்போதைய சூழ்நிலையால் விமான நிலைய செயல்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளன.

விமான நிலையத்தை நடத்துவதற்கு அத்தியாவசியமான ஊழியர்களே தற்போது பணிக்கு அழைக்கப்படவுள்ளனர் என விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

நாட்டின் விமான எரிபொருள் கையிருப்பும் வேகமாக குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய, இலங்கை வருவதற்கும் புறப்படுவதற்கும் எரிபொருளை கொண்டு வருமாறு சர்வதேச விமான நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளது.

இத்தகைய பின்னணியில் ஸ்ரீலங்கன் விமான சேவையின் நிலை என்ன என்பதை அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கும் சிறிய அளவிலான எரிபொருள் மாத்திரமே கிடைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிவில் விமான சேவை அதிகார சபையுடன் இணைந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு எரிபொருள் பெறுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 90 வீதமான எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் செயலிழந்துள்ளன!

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக 90 வீதமான எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் செயலிழந்துள்ளன என அகில இலங்கை எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோரப்படும் எரிபொருள் உரிய முறையில் கிடைப்பதில்லை என்பதால், இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் டப்ளியூ.எஸ்.பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருளை விநியோகித்துள்ளதுடன் 80 எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு மட்டுமே எரிபொருளை ஏற்றிச் செல்ல பவுஸர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது என தனியார் எரிபொருள் பவுஸர்கள் சங்கம் கூறியுள்ளது.

இலங்கை இந்திய எண்ணெய் நிறுவனம் 150 முதல் 200 எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு எரிபொருளை ஏற்றிச் செல்ல சந்தர்ப்பம் வழங்கியுள்ளது என அந்த சங்கத்தின் இணைச் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் எரிபொருள் கிடைக்காது என்ற அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு அருகில் கூட நீண்டவரிசைகளில் மக்கள் நிற்பதை காண முடிவதாகவும் சங்கத்தினர் கூறியுள்ளனர்.

## அரச நிறுவனத்தின் பிரதானிகள் பதவி விலகத் தயாராகின்றனர்!

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் உட்பட அரச நிறுவனங்களின் பிரதானிகள் தமது பதவிகளில் இருந்து விலகர் தயாராகி வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தொடர்ந்தும் நிறுவனங்களை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதால், அவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக நிறுவனங்களின் பிரதானிகள் சிலர், அரச உயர் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

எரிபொருள் மற்றும் அத்தியவசியமான மூலப்பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக பல அரச நிறுவனங்களைக் கொண்டு நடத்த முடியாத சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதனால், நிறுவனங்களின் பிரதானிகள் விரக்தியிலும் செய்வதறியாதும் இருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது. ஏற்கனவே எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பல நிறுவனங்களில் வழமையான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

## உளவியல் ரீதியான பாதிப்புக்கு சிறுவர்கள் உள்ளாகியுள்ளனர்!

கொழும்பு, ஜூலை 03

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக சிறுவர்கள் கடுமையான உளவியல் ரீதியான பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவர்கள் எதிர்நோக்கும் உளவியல் ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் வாசன் ரட்ணசிங்கம் இது தொடர்பாகக் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிடுகையில் –

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மற்றும் பஸ் கட்டண அதிகரிப்புக்கு மத்தியில் மாணவர்கள் பாடசாலைக்கு சென்று தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பாரிய சிரமங்களை சிறுவர்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த நிலையில் மன அழுத்தம் ஏற்படாமல் சிறுவர்களைப் பாதுகாக்க பெற்றோர் உட்பட சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

---

## இரண்டாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த நெருக்கடியிலிருந்து வெளியேற, மக்கள் நம்பும் நம்பகமான மற்றும் நிலையான அரசாங்கத்தை கொண்டு வர வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இப்போது நாங்கள் இரண்டாவது அலையைத் தொடங்கிவிட்டோம். முதல் அலையை விட இரண்டாவது சுனாமியாக முன்னோக்கி வரும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் .– என அவர் தெரிவித்துள்ளார்.

## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 10,000 ரூபா நிவாரணம் என அரசு அறிவிப்பு!

நாடளாவிய ரீதியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கம் 2000 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வெள்ளிக்கிழமை மாலை கூடிய வாழ்க்கைச் செலவு தொடர்பான குழுவின் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

நாட்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாதாந்தம் 7 ஆயிரத்து 500 ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபா வரை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

பொருளாதார நெருக்கடியால் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு குறைந்தபட்சம் அடுத்த ஆறு மாதங்களுக்கு மாதாந்த உணவு நிவாரணம் வழங்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு உணவுப் பொருள்களை வழங்குவதே மிகப் பெரிய சவாலாகும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

## ஹற்றன் சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்கப்படாமையால் குழப்பம்

ஹற்றன் சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெறுக்கொள்ள வந்த சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு பெரியளவு எரிபொருள் வழங்கப்படாமையால் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

அத்தியவசிய சேவைக்காக சுகாதார துறையினருக்கு வெள்ளிக்கிழமை முதல் எரிபொருள் வழங்கப்பட்டு வந்தது.

எனினும், சிலர் வெள்ளி முதல் வரிசையில் காத்திருந்து நேற்று( சனிக்கிழமை) எரிபொருளை பெற்றுக் கொள்ளச் சென்ற வேளையில் எரிபொருள் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த அவர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் கினிகத்தேன, நாவலப்பிட்டி, தலவாக்கலை, கொட்டகலை, டிக்கோயா, பொகவந்தலாவ மற்றும் மஸ்கெலியா போன்ற பகுதிகளில் பணியாற்றும் வைத்தியசாலை ஊழியர்களே இவ்வாறு எதிர்ப்பில் ஈடுப்பட்டனர்.

6 ஆயிரத்து 600 லீற்றர் பெற்றோல் தொகையே இவ்வாறு கொண்டு வந்ததாகவும், அவை தீர்ந்து விட்டதாகவும் அறிவிக்கப்பட்டமையால் இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மண்டபம் அகதிகள் முகாமில் இருந்த இலங்கை தமிழ் இளைஞர் தற்கொலை

தமிழகத்தில் மண்டபம் அகதிகள் முகாமில் இருந்த இலங்கை தமிழ் இளைஞர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ராணி என்ற பெண் ஒரு மகன், மூன்று பெண் பிள்ளைகளுடன் இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகத்துக்குச் சென்று மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்கி வசித்து வருகின்றார்.

இந்நிலையில் இலங்கை அகதியான ராணி என்ற பெண்ணின் மகனான 22 வயதுடைய இளைஞர் நிரோஷன் கடந்த சில நாள்களாக வேலைக்கு செல்லாமல் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு செல்போனில் கேம் விளையாடி சுற்றித் திரிந்துள்ளார்.

இதையடுத்து ஆத்திரமடைந்த ராணி தனது மகனை கேம் விளையாடுவதை விட்டுவிட்டு வேலைக்கு செல்லுமாறு கண்டித்ததுள்ளார்.

இதையடுத்து தாயின் கண்டிப்பால் மனம் உடைந்த ஈழத் தமிழர் இளைஞர் தவறான முடிவெடுத்து தன் உயிரை மாய்த்துள்ளார்.

இதையடுத்து மயக்க நிலையில் இருந்த நிரோஷனை அவரது நண்பர்கள் வைத்தியசாலையில் சேர்த்தபோது சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து உயிரிழந்த ஈழத் தமிழர் இளைஞரின் உடலை உடற்கூறு ஆய்வு செய்யப்பட்டு மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமிற்கு கொண்டு வரும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் இது தொடர்பாக உயிரிழந்த ஈழத் தமிழர் இளைஞரின் சகோதரி பிரியா கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வேலைக்கு செல்லாமல் தனது செல்போனில் கேம் விளையாடுவதை தாய் கண்டித்ததால் விபரீத முடிவு எடுத்த இளைஞரால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மிகுந்த சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.